
# சத்தியவசனம்

வேதாகம வார்த்தையைப் போதிக்கும் சஞ்சிகை

ஏப்ரல் – மே 2013



கர்த்தர்
பெரிய காரியங்களைச்
செய்வார்!

(யோவேல் 2:21)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்











**04** இரண்டு கள்வர்கள்
தன்னைக் குறித்து தன் வாழ்வைக் குறித்து உணர்வடைந்து இயேசுவிடம் வருபவர்களுக்கு வாழ்வு உண்டு

**08** தேவ அன்பு
உங்களுக்காக உயிர்கொடுத்து தமது அன்பை வெளிப்படுத்திய கிறிஸ்துவுக்கு உங்கள் உள்ளத்தைக் கொடுங்கள்

**12** [illegible] [illegible]ள் நடந்தபின்பு
தேவனுக்கு [illegible] முதலிடத்தை எந்தவொரு
விடயத்தி[illegible] [illegible]ந்தாலும் கொடுக்கக்கூடாது

**15** இணைத்து கட்டும் திருமணம்
கடந்ததை எண்ணிக் கவலையுறுவதை விட்டுவிடு.
கர்த்தருடைய பரிபூரண அன்பில் மகிழ்ந்திரு

**[illegible]** [illegible]
[illegible] [illegible]வன் நடுவாகும் போதுதான்
[illegible] [illegible]தைக் கண்டுபிடிக்கிறான்

**24** [illegible] கணக்கு கொடுக்க வேண்டியவன்
நமது வாழ்க்கையில் நாமெல்லாரும் கிறிஸ்துவின்
நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும்

**28** [illegible] [illegible]லை
[illegible] மனிதரும் இயேசுவை அறிய வேண்டும்
அவரே நமது சிறந்த வைத்தியர்



[illegible]
திரு. [illegible]

**முகாமையாளர்:**
திரு. ரவிசங்கர்

**சஞ்சிகை ஆசிரியர்:**
திரு. வஷ்னீ ஏனர்ஸ்ட்

120 A, Dharmapala Mawatha, Colombo - 07. Sri Lanka. **T:** 4691500, **F:** 2698843, **E:** info@backtothebible.lk, **W:** www.backtothebible.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாக இயக்குனரிடமிருந்து



நிர்வாக இயக்குனர்

மயூக பெரேரா

"குழலுக்குள் இருப்பதுதான் நசுக்கப்படும்போது வெளியேவரும். வேறெதுவும் வராது" இதைக் கூறியவருக்கு நன்றாகத் தெரியும் அதன் அர்த்தம் என்னவென்று!

"இவர் செய்த செயல் என் பொறுமையின் எல்லையை தாண்ட தூண்டிவிட்டது" "இப்படியான சூழ்நிலையில் என்னத்தைத்தான் செய்வது" இப்படியாக அநேகமான வேலைகளில் நாங்கள் தரம் குறைந்த விதத்தில் நடந்துகொண்டு அல்லது கோபத்தை செயல்முறையில் காட்டி அல்லது இன்னொருவரின்மீது பொய் குற்றஞ்சாட்டி வெவ்வேறு விளக்கங்களுக்கூடாக எம்முடைய பிழையான நடத்தையை நாம் நியாயப்படுத்த முற்படுகின்றோம். இவ்விதமாக நாம் "பொதுவான சூழ்நிலையில் நான் நல்லவனாக இரக்கமும் நேர்மையும் உள்ளவனாக இருக்கின்றேன். எனினும், தீய காரியங்கள் ஏற்படும் போது மட்டுமே தவறாக நடந்துகொள்கிறேன்" என எம்மை நாமே நியாயப்படுத்திக் கொள்வோம்.

இவை ஏற்றுக்கொள்ளக்கூடிய சாக்குபோக்குகள் அல்ல என்பதை நான் உணர்ந்ததுபோல,நீங்களும் உணருவீர்கள் எனநான் நம்புகின்றேன்! மற்றவர்கள் எமக்கு என்ன செய்தாலும்,அல்லது எவ்விதமான கடினமான சூழ்நிலைக்கு நாம் முகங்கொடுத்தாலும், எமக்குள் இருப்பதுவே உண்மையாக வெளிவரும்.

பாதசாரி கடவையிலே ஒருவர் தவறான இடத்தில் தவறான நேரத்தில் கடக்கின்றதை காணும்போது, நாம் பொறுமையை இழந்துபோகிறோமே, அப்போது என்னுள்ளே இருப்பதுதான் வெளியே வரும் எமது வாழ்க்கை துணை அல்லது பிள்ளைகள் ஏதேனும் விதத்தில் எம்மை எரிச்சலூட்டும்போது, எமக்குள் உள்ளிருப்பதின் வெளிப்பாடே வெளிவரும். அந்தச் சூழ்நிலை உச்சக்கட்டத்தில் ஒரு பொய் சொல்லும் போது... அது என்னைப் பற்றிய உண்மைதன்மையை வெளிக்காட்டும். இவ்வாறான சவாலான சூழ்நிலையில் எம்முடைய மாறுத்தரம் எமது அடிப்படை நம்பிக்கையின் பெறுமானத்தினை வெளிக்காட்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியருக்கு கூறும் போது (கலாத்தியர் 5:16-25)

16. பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்படி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். 17. மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. 18. ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல.

19. மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன. அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், 20. விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், 21. பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

22. ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், 23. சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.

24. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். 25. நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்படி நடக்கவும் கடவோம்.

இதைக் கேட்கவே நான் விரும்புகின்றேன்!

பரிசுத்த ஆவியானவர் என்னை ஆளுகை செய்வாரானால், நான் நசுக்கப்படும்போது, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இவையே என்னிடத்திலிருந்து வெளிவரும். இது என்னிடத்திலிருந்து வெளிவருவது இல்லையென்றால், மறுபடியும் பரிசுத்தாவியானவரின் ஆளுகைக்குள் வரவேண்டியது அவசியம் என்பதே அடையாளமாகும். நானும் அப்படியே செய்வேன்!

இப்படியான சூழ்நிலைகளில் உங்களிடத்திலிருந்து வெளியே வருவது என்ன?

கிறிஸ்துவுக்குள்,

MAYUKHA

மயூக பெரேரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவானவர் சிலுவையிலே தொங்கும்போது அவரது சிலுவையின் இரண்டு புறத்திலே சிலுவையிலே தொங்கிக்கொண்டிருந்த இரண்டு குற்றவாளிகளாகிய அந்த கள்வர்களைக்குறித்து லூக்கா 23:39 முதல் 43ஆம் வசனம்வரை எழுதப்பட்டுள்ள வேதபகுதியிலிருந்து நாம் கற்றுக்கொள்ளப் போகிறோம். சிலுவையின் அருகில் போர்வீரர்களும் இந்த காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தனர். இந்த சமயத்திலே இயேசு சிலுவையிலே ஜீவனோடு இருந்தார். அதேவேளை சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த இரு கள்வர்களும் உயிரோடிருந்தனர்.

அவர்களில் ஒருவன் இயேசுவைப் பார்த்து, “நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்” என்று அவரை இகழ்ந்தான். உண்மையாகவே இது வலது பக்கத்து கள்ளனா? அல்லது இடது பக்கத்துக் கள்ளனா? என்று திருமறையிலே சொல்லப்படவில்லை. ஆனால் பொதுவாக பாரம்பரிய நம்பிக்கையிலே, இந்த இகழ்ச்சியான வார்த்தைகளைச் சொன்ன அந்தக் கள்ளனை இடதுபுறத்துக் கள்ளனாகவே மக்கள் அழைக்கின்றனர். இங்கே அந்த மனிதன் சொன்ன வாக்கியங்கள் ஒரு ஜெபம்போல காணப்படுகின்றது “நீ கிறிஸ்து வானால் உன்னையும் எங்களை யும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான்” (லூக்கா 23:39). இது வெளிப்படையான பார்வையிலேஒருஜெபம்போலகாணப்பட்டாலும்,அதுஜெபம்அல்ல.இதுஆண்டவரைக்குறித்தஒரு பரியாசமான வார்த்தையாகும். இந்த வார்த்தையைக் கேட்ட இன்னொரு கள்ளன் அதாவது மனந்திரும்பப் போகிற கள்ளன், மற்றவனைப் பார்த்து கடிந்துகொள்கிறான். நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம். இவரோ தகாத ஒன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அந்த முதலாவது கள்ளனை கடிந்துகொள்கிறான். அருமையானவர்களே, மனந்திரும்பி ஆண்டவரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்ட அந்த கள்ளனுடைய வாழ்க்கையிலிருந்து சில காரியங்களை நாம் இன்றைக்கு கற்றுக்கொள்ளப் போகிறோம்.

1. பாவ உணர்வடைந்தான்

முதலாவதாக அவனுடைய வாழ்க்கையிலே பாவ உணர்வு அவனுக்குள் இருந்தது அல்லது பாவ உணர்வை அடைந்தான் என்று சொல்லலாம். முதலாவது தான் ஒரு பாவி என்பதை ஒத்துக் கொள்கிறான். லூக்கா 23:41இல் “நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்” என்று சொல்கிறான். நாம் தண்டிக்கப்பட்டதற்கு காரணம் என்ன? நாம் இந்த சிலுவையிலே மரண தண்டனை அடைவதற்கு காரணம் என்ன? நாம் செய்த கடந்தகால தவறுகள், கடந்த கால பாவங்கள் என்பதை உணரத்தக்கதாக சொல்கிறான். “நாம் நியாயப்படி தண்டிக்கப்படு கிறோம்”. ஆகவே நாம் இன்று நடப்பித்தவைகள் ஒவ்வொன்றுக்காகவும் நாம் தண்டிக்கப் படுகிறோம். ஆனால் இவரோ தகாததொன்றையும் செய்யவில்லையே என்று சொல்கிறான். இந்த மனந்திரும்பின கள்ளன் பாவ உணர்வடைந்தான். தன்னைக்குறித்து, தன் வாழ்வைக் குறித்து, தன்னோடு அடிக்கப்பட்ட இன்னொரு கள்ளனுடைய வாழ்க்கையைக் குறித்து அவன் உணர்ந்து கொள்கிறான்.

# இரண்டு கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் பாவிகள், நாங்கள் செய்த பாவங்களுக்குத் தக்க தண்டனையை அடைந்தோம் என்கிற உணர்வை அடைகிறான்.

அருமையான சகோதரனே, சகோதரியே பாவ உணர்வு என்பது ஒரு மனிதனுக்குள்ளே சுயமாய் வருவதல்ல, அல்லது ஒரு மனிதர் இன்னொரு மனிதருக்குள்ளே பாவ உணர்வை திணிக்கவோ, உருவாக்கவோ முடியாது. பாவ உணர்வை யார் தரமுடியுமென்றால் "பரிசுத்த ஆவியானவர்"தான். ஆவியானவர்தான் ஒரு மனிதனுக்குள்ளே பாவ உணர்வைத் தருகிறார், உருவாக்குகிறார். ஆவியானவருடைய உதவியில்லாமல் எந்தவொரு மனிதனும் கிறிஸ்துவண்டை வரமுடியாது. ஆவியானவருடைய உதவி இல்லாமல் எந்த சகோதரனும், எந்த சகோதரியும் இயேசுவை கர்த்தர் என்று அறிக்கைசெய்ய முடியாது. ஆகவே ஆவியானவர் ஒரு மனிதனுக்குள்ளே இடைபடும் பொழுதுதான் அவன் பாவ உணர்வடைகிறான். எனவேதான் பரிசுத்த ஆவியானவர் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அருமையானவர்களே! ஆவியானவர் தற்காலத்திலே எப்படி கிரியைச் செய்கிறார்? தேவ வசனத்தின் ஊடாக பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்கிறார். வசனமும் எதனாலே கிரியை நடப்பிக்கிறது? ஆவியானவருடைய துணையினாலே கிரியை நடப்பிக்கிறது. ஆவியானவரையும் திருவசனத்தையும் நாம் ஒருபோதும் பிரிக்கவே முடியாது. ஆவியானவர் எங்கே உண்டோ அங்கு திருவசனம் கனம் பண்ணப்படுகிறது. அல்லது திருவசனம் எங்கே சரியாக விதைக்கப்படுகிறதோ, சொல்லப்படுகிறதோஅங்குஆவியானவருடையகிரியைஉண்டு.

இங்கே நாம் பார்க்கும்போது, பரிசுத்தமான தேவ குமாரனாகிய இயேசுகிறிஸ்து சிலுவையிலே சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தைகளையும் கவனமாக கேட்டுக்கொண்டிருக்கிறான் இந்த கள்ளனான மனிதன். ஆகவே, அவனுக்குள்ளே உணர்வு வருகிறது. பாவ உணர்வு மாத்திரமல்ல, இவனுக்குள்ளே இன்னொரு உணர்வும் வருகிறது. இவரோ தகாததொன்றையும் நடப்பிக்க வில்லையே என்று சொல்லுகிறான். பாருங்கள், தான் பாவி என்பதை உணர்ந்தான். அவரையோ பாவம் செய்யாதவர் என்பதை விசுவாசித்தான். விசுவாசித்தது மாத்திரமல்லாமல், தன் சக குற்றவாளியைக் கடிந்துகொள்கிறான். இவ்வளவு தண்டனைகளைப் பெற்றும் நீ இதைப் புரியவில்லையா அல்லது உணரவில்லையா என்று கடிந்துகொள்கிறான்.



அருமையானவர்களே! நாம் துன்பமடைந்தபோதிலும் அநேகரை பரியாசம்பண்ணுகிற நிலைகள் நம் அநேகரின் வாழ்விலும் காணப்படுவது உண்டல்லவா! அதேபோலத்தான் இந்த முதல் கள்ளனிடத்திலும் காணப்பட்டது. ஆனால் மனந்திரும்பின இந்த இரண்டாவது கள்ளனோ தான் பாவி என்ற உணர்வை அடைந்தான். அதேசமயத்திலே கிறிஸ்துவோ பாவம் செய்யாதவர் என்கிற உணர்வை அடைந்தான். இதுதான் அவனது விசுவாச வாழ்க்கையிலே ஒரு படியாக மாறி விடுகிறது. இந்த பாவஉணர்வு அடைந்ததோடு அவன் நின்றுவிடவில்லை.



# வர்கள்

சுவி. சுவி பிரபாகரதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஜெபித்தான்.

இரண்டாவதாக, இயேசுவினிடத்தில் ஒரு அருமையான ஜெபம் செய்தான். திருமறையிலே காணப்படும் சிறப்பான சுருக்கமான ஜெபங்களிலே மிக அருமையான ஜெபம் இந்த ஜெபமே. "தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" (லூக்.18:13). அதேபோல இங்கே ஒரு ஜெபத்தை பண்ணுகிறான் இயேசுவை நோக்கி: "ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" (லூக்கா 23:42). பார்வைக்கு இது சுருக்க ஜெபமாக இருக்கலாம், வாக்கியத்தைப் பார்த்தால் மிக சுருக்கமான வாக்கியமாயிருக்க லாம். ஆனால் ஆழமான, தெளிவான, ஏராளமான இறையியல் கருத்துக்களை உள்ளடக்கிய வாக்கியமே இதுவாகும். முதலாவது இயேசுவை பரிசுத்தர் என்று ஏற்றுக்கொண்டவன், அடுத்து ஜெபம் பண்ண ஆரம்பிக்கிறான். ஆண்டவரே! என்று சொல்கிறான். ஆண்டவரே! என்றால் ஆளுகிறவர் என்று அர்த்தம். அதாவது, தான் எதிர்பார்த்திருக்கிற இராஜா என்ற பொருளிலே ஆண்டவரே! என்று சொன்னான். ஒருவேளை மற்ற மனிதர்களைப்போல ஒரு சாதாரண போதகரே, மேய்ப்பரே என்று அவரை அவன் அழைக்கவில்லை. "ஆண்டவரே" என்று அழைத்ததின்மூலம் அவனது விசுவாசத்தினுடைய முதல்படி ஜெபத்திலே தொனிக்கிறது.

சகோதரனே, சகோதரியே! இதை படித்துக் கொண்டிருக்கின்ற உன் வாழ்க்கையிலே எத்தனையோமுறை நீ ஆண்டவரே, ஆண்டவரே என்றுசொல்லி அழைக்கிறாய். ஆண்டவரே என்று சொல்லி நீ பாடுகிறாய். உன் வாழ்க்கையிலே ஒவ்வொரு பகுதிகளிலும் நீ ஆண்டவரின் ஆளுகையை ஏற்றுக்கொண்டிருக்கிறாயா? ஆண்டவர் உன்னை ஆளுகின்றாரா? இப்பொழுது இந்த இயேசுவானவர் ஆளாதபடி மற்றவர்கள் நம்மை ஆண்டுகொண்டிருப்பார்களானால் நாம் மனந்திரும்ப வேண்டும். இந்த மனந்திரும்பின கள்ளன் அவரை, "ஆண்டவரே" என்று சொல்லி அழைக்கிறான். அதோடு அவன் நின்றுவிடவில்லை.

3. விசுவாசித்தான்.

அடுத்ததாக "நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது" என்று சொல்கிறான். "ராஜ்யம்" என்பது இராஜாவோடு இணைந்த ஒன்றாகும். இராஜாவிடத்தில்தான் ராஜ்யம் இருக்கும். யார் இராஜாவாக இருக்கிறாரோ அவருக்கு நிச்சயமாகவே ராஜ்யபாரம் உண்டு. ஆண்டவரே! என்று அழைத்தவன், நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது என்னை நினைத்தருளும் என்று வேண்டிக்கொண்டான். பாருங்கள்; இந்த விசுவாச ஜெபத்தை ஆண்டவர் அங்கீகரித்தார். அருமையானவர்களே! பாவ உணர்வோடு, ஆண்டவரை விசுவாசித்து நாம் ஏறெடுக்கும் சகல ஜெபத்திற்கும் பதில் வருகிறது. ஆண்டவரை நோக்கி விசுவாசத்தோடு கதறுகிற மக்களுக்கு நிச்சயமாக பதில் உண்டு. இந்த மனிதன் சிலுவையிலே தொங்குகிற அந்த சூழ்நிலையிலும் கூட ஆண்டவரே, உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்று வேண்டினான். அது அவனது வாழ்க்கையில் ஆச்சரியமான காரியங்களை நடப்பித்தது. ஆண்டவர் தனது வேதனையின் மத்தியிலும் அவனிடத்தில் தமது வாய் திறந்து சொல்கிறார்: "இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார். "இன்றைக்கு" அப்படியானால் அவனது ஜெபத்திற்கு உடனடியாக பதில் வருகிறது. இன்றைக்கு என்று உடனடியாகவே அவனது வாழ்வுக்கு பதில் கிடைக்கிறது.

எனது அருமையானவர்களே! நம்முடைய ஜீவியத்தை நாம் ஒருமுறை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்தக் கள்ளன் ஜெபித்தவுடனே, ஆண்டவர் அவனுக்கு இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று வாக்கு கொடுத்தார். நமது ஜெபத்துக்கும் நிச்சயமாகவே பதில் உண்டு. இந்த மனிதன் கள்ளனாக இருந்தும் சிலுவையிலே தொங்குகின்ற நிலைமையிலிருந்தும் விசுவாசித்து, உணர்ந்து ஆண்டவரை நோக்கி கதறி ஜெபிக்கும்போது அவனது வாழ்க்கையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்பு வந்தது. அப்படியானால் இந்த சம்பவத்தின் மூலமாய் நாம் கற்றுக் கொள்கிற சில படிப்பினை உண்டு. ஒரு மனிதன் விசுவாசித்து பாவ உணர்வோடு அவரை நோக்கி ஜெபிக்கிற மனிதனை ஆண்டவர் ஏற்றுக்கொள்கிறார். "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிற வர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று சொல்கிறார். அவரிடத்தில் வருகிற எவரையும் அவர் புறம்பே தள்ளுகிற தில்லை. எந்த இடத்திலே எந்த சூழ்நிலையிலே யாராக இருந்தாலும் ஆண்டவர் அவர்களை ஏற்றுக்கொள்கிறார், மறுபிறப்பு கொடுக்கிறார், அவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறார்.

அப்படியானால் அவரிடத்திலே நித்திய ஜீவனைப் பெறுவதற்கும், அவரிடத்திலே நித்திய ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கும், அவரிடத்திலே நித்திய மகிமையைப் பெறுவதற்கும் என்ன வழியென்று சொன்னால் மூன்று காரியம் செய்யவேண்டும். 1. பாவ உணர்வடைய வேண்டும். 2.நாம் ஜெபிக்கவேண்டும். 3. ஆண்டவரை விசுவாசிக்கவேண்டும். இந்த மூன்று காரியங்களும் நடைபெறும்போது நிச்சயமாகவே ஆண்டவர் பெரிய காரியங்களைச் செய்வார்.

சவுல் என்கிற மனிதன் ஆண்டவருக்கு விரோதமாக பாவம் செய்தவன், கலகம் செய்தவன், ஆண்டவருக்கு விரோதமாக வாழ்ந்து திருச்சபையை பாடாய்படுத்தினவன், திருச்சபைக்கு விரோதமாக சீறி எழும்பினவன் (அப்.9:1-5). ஆனால் என்ன நடந்தது? அவன் பயணம் செய்து கொண்டிருந்த பாதையிலே மத்தியான வெளிச்சத்திலே ஒரு பெரிய வெளிச்சத்தின் மூலமாய் ஆண்டவர் அவனை சந்தித்தார். வெளிச்சத்தைக் கண்ட சவுல் கீழே விழுந்தான். கர்த்தருடைய சத்தம் கேட்கிறது. "சவுலே, சவுலே ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்?" அந்த வெளிச்சத்தைக் கண்ட சவுல் உடனே ஆண்டவரே, நீர் யார் என்று கேட்கிறான்? உடனே ஆண்டவராகிய இயேசு, "நீ துன்பப்படுத்துகிற கிறிஸ்து நானே" என்றார். பாருங்கள், சவுல் ஆண்டவரை துன்பப்படுத்தி னானா? இல்லவே இல்லை. ஆனால் ஆண்டவரின் சரீரமாகிய சபையை அவன் துன்பப் படுத்தினதை தன்னை துன்பப்படுத்தினதாக கூறுகிறார். "நீ துன்பப் படுத்துகிற கிறிஸ்து நானே" என்று அவனிடம் சொன்னார். இப்படி சொன்னவுடனே, "ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்று சவுல் கேட்டான். ஆண்டவர் அவனை சந்தித்தபோது அவர் யார் என்று அறிந்தபோது அவன் உணர்வடைகிறான். "ஆண்டவரே! நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்றான். இதிலே அவனது உணர்வு, அர்ப்பணம் எல்லாமுமே வெளிப்படுகிறது.

அருமையானவர்களே, நமது ஜீவியத்தினை ஆராய்ந்து பார்ப்போம். இந்த சவுலுடைய வாழ்க்கையிலே ஒரு உணர்வு வந்தது. அதேசமயத்திலே அவனது வாழ்க்கையிலே விசுவாசம் வந்தது. அந்நேரத்திலே, "நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்று வேண்டிக்கொண்டான். உடனே ஆண்டவர் சொல்கிறார், "நீ பட்டணத்திற்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்கு சொல்லப்படும்" (அப்.9:6) அவன் உடனே சென்று அப்படியே கீழ்ப்படிந்தான்.

அருமையானவர்களே! எந்த சூழ்நிலையிலே எந்த நிலையிலே நீங்கள் வாழ்ந்துகொண்டி ருந்தாலும், பயப்படவேண்டாம். ஆண்டவரண்டை வாருங்கள். அவர் உங்களை ஏற்றுக்கொள் வார். உங்களுக்காக விலைமதிக்க முடியாத தன்னுடைய இரத்தத்தையே சிந்தின ஆண்டவர் இன்றைக்கும் உயிரோடிருக்கிறார். எனவே, அவரண்டையில் வாருங்கள். விசுவாசத்தோடு அவரை நோக்கிப் பார்ப்பீர்களானால், அவரை நோக்கி ஜெபிப்பீர்களானால் அவர் உங்களுக்கு செவிகொடுப்பார். ஆண்டவர் உங்களை நேசிக்கிறவராக இருக்கிறார். அந்தக் கள்ளனுக்கு 'இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்' என்ற ஆண்டவர், தமது வாக்குறுதிக்கு அவ்வளவு நிச்சயமும் அழுத்தமும் இருக்கிறதினாலே அவர் அவ்வாறு சொல்கிறார். ஆகவேதான், நாம் பாவ உணர்வோடும், விசுவாசத்தோடும் அவரை நோக்கிப் பார்த்து, "ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது என்னை நினைத்தருளும்" என்று ஜெபிப்பீர்களானால் நிச்சயமாய் ஆண்டவர்தாமே உங்களை ஏற்றுக் கொள்வார். தொடர்ந்தும் கரம்பிடித்து வழிநடத்துவார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நன்மைக்கு தீமை செய்வது பிசாசின் குணம்.
நன்மைக்கு நன்மை செய்வது மனித இயல்பு.
ஆனால் தீமைக்கு நன்மை செய்வதோ தெய்வீக அன்பு!

# தேவ அன்பு

சகோ.பிரகாஷ் ஏசுவடியான்

தேவனுடைய அன்பைக்குறித்து நாம் சிந்திக்கும்போது தேவன் தமது சாயலிலே நம்மைப் படைத்தார் என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் நமக்கு அவருடைய நிபந்தனைகளைக் கொடுத்தார். அந்த நிபந்தனைகளோடுகூட சுயாதீனத்தையும் கொடுத்தார். அந்த சுயாதீனத்தை மனிதன் தவறாக பயன்படுத்தி, "இது என் வாழ்க்கை, என் இஷ்டப்படி வாழ எனக்கு உரிமையுண்டு" என்றும், "இது என் சரீரம் என் இஷ்டப்படி பயன்படுத்த எனக்கு உரிமையுண்டு" என்றும் சொல்லி தன் சரீரத்தைப் பாவங்களினாலே கறைபடுத்தினான். மனதை, "என் மனது என் இஷ்டப்படி சிந்திப்பேன்" என்று அசுத்தமான, அருவருப்பான சிந்தனைகளுக்கும் தவறான சிந்தனைகளுக்கும் இடம்கொடுத்தான். "என் சமுதாயம், என் இஷ்டப்படி வாழ்வேன்" என்றான். இவ்வாறு மனிதனுடைய வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இப்படி பாதிக்கப்பட்ட மனிதனைத் தேடி வந்த இறைவன் இந்த உலகத்திற்கு தமது அன்பை வெளிப்படுத்தினார். எப்படியெல்லாம் தேவன் தனது அன்பை வெளிப்படுத்தினார்? வேதாகமத்திலே தேவனுடைய மனிதர்களான ஆபிரகாம், ஈசாக்கு, மோசே, யோசுவா இப்படிப்பட்ட பெரிய மனிதர்களைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் மூலமாய் தமது அன்பை தேவன் வெளிப்படுத்தினார். மனிதர்கள் அதற்கு இணங்காதபோது ராஜாக்களின் மூலமாக தமது அன்பை வெளிப்படுத்தினார். அவர்களின் ஆட்சியின் மூலமாக, அவர்களுடைய நீதியின் மூலமாக அன்பை வெளிப்படுத்த பிரயாசப்பட்டார்கள்.

தேவ அன்பிற்கு மனிதன் இணங்கவில்லை. அதன்பிறகு நியாயத்தின் மூலமாக நியாயத்தீர்ப்புகளின் மூலமாக தேவன் தமது நீதியை வெளிப்படுத்தினார். ஆனால் மனிதன் இணங்கவில்லை. அதன்பிறகு தீர்க்கதரிசிகளை அவர் அனுப்பினார், பல தீர்க்கதரிசிகளை தேவன் அனுப்பி தமது அன்பை வெளிப்படுத்தினார்.



நமது கரத்திலே இருக்கிற வேதாகமம் சொல்லுகிற ஒரேயொரு சத்தியம், "தேவன் நம்மேல் அன்புள்ளவராய் இருக்கிறார்" என்பதாகும். அவர் தமது அன்பை பலவிதங்களிலே வெளிப்படுத்தி வந்திருக்கிறார். இதற்கெல்லாம் மனிதன் இணங்காமல் இருக்கும்போது இயேசு கிறிஸ்து தாமே இந்த உலகத்திற்கு வந்து தமது அன்பை வெளிப்படுத்தினார். தமது போதனைகளின் மூலம் அன்பை வெளிப்படுத்தினார். உதாரணமாக மத்தேயு 5,6,7 அதிகாரங்களில் மலைப் பிரசங்கங்களின் மூலம் வெளிப்படுத்தினார். இந்த வசனங்களைப் படித்து மகாத்மா காந்தி போன்ற பெரும் தலைவர்கள் அகிம்சை என்கிற கொள்கையை அவர்கள் வாழ்க்கையின் அடிப்படை கொள்கையாக மாற்றிக்கொண்டார்கள். ஏனென்றால் அவைகளில் இயேசு கிறிஸ்து தமது அன்பை வெளிப்படுத்தினார். போதகத்தின் மூலமாக தமது அன்பை வெளிப்படுத்தினார். போதனைகளைக் கொடுத்துவிட்டு அவர் மறைந்துபோகவில்லை. மலையிலிருந்து கீழே வந்து குஷ்டரோகியை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொடுகிறதைப் பார்க்கிறோம். அவர் குஷ்டரோகியை தொட்டு, "எனக்கு சித்தமுண்டு சுத்தமாகு" என்றார். வியாதியுள்ளவர்கள் அவரிடத்தில் வருகிறார்கள், அவர் களைப் பார்த்து மனதுருகி அவர்களுக்கும் சுகத்தைக் கொடுக்கிறார். வியாதியிலும் பலவிதமான கஷ்டங்களி லும் வேதனைகளை அனுபவிக்கிறவர்கள் மத்தியிலே தமது அன்பை வெளிப்படுத்தும்படியாக இயேசு கிறிஸ்து கிரியை செய்கிறவராக காணப்பட்டார்.

ஆனால் அதோடுகூட அவர் மறைந்துபோய்விட வில்லை. போதனைகளை கொடுத்துவிட்டு, சாதனை களை செய்துவிட்டு அவர் வாழ்க்கையின் இறுதியிலே சிலுவைக்குச் சென்றார். அவரை பகைத்தவர்கள் அவரை குத்தினார்கள், கண்களை கட்டினார்கள், பரிகாசம் செய்தார்கள், காறி துப்பினார்கள், இவ்வித மான வேதனைகளை இயேசு கிறிஸ்து அனுபவித்தார். சிலுவையிலே அறைந்தார்கள். சிலுவைக்கு செல்லு முன் கெத்செமனேயில் ஜெபிக்கும்போது அவருடைய வேர்வை இரத்தமாக வெளியே வந்ததை வேதத்திலே வாசிக்கிறோம். இவ்வாறு அவருடைய வேதனைகளின் மூலமாக தமது அன்பை வெளிப்படுத்தினார். இயேசு கிறிஸ்து சிலுவையிலே மரித்தபொழுது தமது அன்பை நமக்கு வெளிப்படுத்தினார். சிலுவையிலே தேவகுமார னாகிய இயேசு கிறிஸ்து தமது உயிரைக் கொடுத்ததே தேவன் தம் அன்பை வெளிப்படுத்தின உச்சகட்டமாகும். இயேசு கிறிஸ்து சிலுவையிலே எதற்காக மரித்தார்?




**1. 'அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும் போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்' (ரோமர் 5:6).**

நாம் பெலவீனர்கள் என்பதை அடிக்கடி உணரு கிறோம் இல்லையா! நல்ல வாழ்க்கை வாழவேண்டும் என்று விரும்புகிறோம். ஒரு கொடுமையான வாழ்க் கையை நாம் வாழக்கூடாது என்று விரும்புகிறோம். ஆனால் நம்மால் அது முடியவில்லையே. ஏனென்றால் நாம் பெலவீனர்கள். நமது சரீரத்திலே பெலன் இல்லை. நமது சிந்தனையிலே பரிசுத்தம் இல்லை. எதை நாம் செய்யக்கூடாது என்று நினைக்கிறோமோ அதையே செய்துவிடுகிறோம். எதைச் செய்யவேண்டும் என்று நினைக்கிறோமோ அதை நம்மால் செய்ய முடிய வில்லையே. தீர்மானம் செய்து செய்து பார்க்கிறோம்.

பல ஆண்டுகளுக்கு முன்பாக நான்கு வாலிபர் களைப் பற்றி ஒரு பத்திரிகையில் படித்துக்கொண்டிருந் தேன். கதையாக அவர்கள் எழுதின காரியம் உண்மையோ, கற்பனையோ என்று எனக்கு தெரியாது. இந்த நான்குபேரும் ஒரு தீர்மானம் செய்துவிட்டு ஒரு இடத்திலே போய் உட்கார்ந்தார்கள். என்ன தீர்மானம் என்றால், இன்றையிலிருந்து நாம் ஒருவரோடு ஒருவர் பேசக்கூடாது. ஏன் பேசக்கூடாது? மற்றவர்களைப் பற்றி நாம் புரணி பேசிவிடுகிறோம், கோள் சொல்லி விடுகி றோம், தவறாய் சொல்லி விடுகிறோம், வாயிலே கெட்ட வார்த்தைகள் வந்து விடுகிறது. ஆகவே பேசக்கூடாது என்று தீர்மானம் பண்ணிவிட்டு உட்கார்ந்தார்கள். மதியம் 12 மணியானது அவர்கள் பேசவில்லை. மாலை 4 மணியானது அவர்கள் பேசவில்லை. மாலை 6 மணிக்கு குளிர்காற்று தென்றல் வீசினபோது அது சரீரத்திலே பட்டவுடனே ஒருவனால் பொறுத்துக் கொள்ள முடியாமல், நல்ல காற்று வீசுகிறது என்று சொல்லி விட்டான். இதைச் சொன்னவுடனே அடுத்தவன் சொன்னானாம், பேசாதடா, நாம் பேசக் கூடாது என்று தீர்மானம் பண்ணியிருக்கிறோம்" என்று சொன்னான். உடனே அடுத்தவன், "இவர்கள் இரண்டுபேரும் பேசி விட்டார்களே" என்று சொன்னான். கடைசி நான்காவது மனிதன் சொன்னானாம்: "நான் ஒருவன்தான் இன்னும் பேசவில்லை" என்று. இதைப் படிக்கும்போது சிரிப்பு வருகிறது. நான்குபேர் ஒரு தீர்மானம் பண்ணினார்கள். அந்த தீர்மானத்தை உடைத்தபோது நாம் சிரிக்கி றோமே, நாம் எத்தனை தீர்மானங்களை செய்திருக்கி றோம். ஜனவரி மாதம் முதலாம் தேதி எத்தனை தீர்மானம் பண்ணியிருப்போம். ஆனால் இரண்டு வாரத்திற்குள் எல்லா தீர்மானங்களையும் உடைத்து விடுகிறோம். நமது பிறந்த தினத்திற்காக காத்திருப் போம், அன்றைக்கு ஒரு தீர்மானம் செய்வோம். பண்டிகை நாட்களுக்காக காத்திருப்போம், அன்றைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஒரு தீர்மானம் செய்வோம். இவ்வாறு எத்தனையோ தீர்மானங்களை செய்த நாம் தீர்மானங்களையெல்லாம் உடைத்துவிட்டு நாங்கள் பெலவீனர்கள், எங்களால் அந்த தீர்மானங்களை கைக்கொள்ள முடியவில்லையே என்று அங்கலாய்க்கிறோம். இப்படிப்பட்டவர்களுக்காக தான் இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார்.

வேதாகமம் சொல்லுகிறது: நாம் பெலனற்றவர்களாயிருக்கும்பொழுதே கிறிஸ்து நமக்காக மரித்தார். நான் பெலவீனன், தீர்மானங்களையெல்லாம் உடைத்துப்போடுகிறேன் என்று நினைப்பீர்களேயானால் உங்களுக்கு தரும் செய்தி என்னவென்றால், "இயேசு கிறிஸ்து உங்களுக்காக சிலுவையிலே மரித்தார்", உயிரோடு எழுந்து உள்ளங்களிலே பிரவேசித்து உங்களைப் பலப்படுத்த அவர் ஆயத்தமாயிருக்கிறார். நமது சொந்த பெலனைக்கொண்டு வாழ்க்கையை வாழ முடியாது. முகமது அலி, மைக் டைசன் போன்ற குத்துச் சண்டைவீரர்கள் தங்கள் கைகளிலே ஒரு உறை போட்டிருப்பார்கள். அந்த உறைக்கு எந்தவிதமான சக்தியும் கிடையாது. அது என் கையில் இருக்கும்வரை பெலவீனமான ஒரு உறையாக இருக்கும். ஆனால் மைக்டைசன் அந்த உறையை எடுத்து தன் கைகளிலே மாட்டிக்கொண்டு நமக்கு நேராக வருவதாக வைத்துக் கொள்வோம், அப்பொழுது நாம் அங்கே நின்று பார்த்து எங்கேயாவது ஓடிவிடுவோம். ஏனென்றால் அவர்களின் கை அந்த உறைக்குள்ளே போனவுடனே பெலவீனமான அந்த உறை பெலமுள்ள உறையாக மாறி விடுகிறது. நாம் பெலனற்றவர்களாய் இருக்கும் போது கிறிஸ்து மரித்தார், உயிர்த்தெழுந்தார் என்கிற செய்தி நல்ல செய்தி என்பதை உணர வேண்டும். உயிர்த்தெழுந்த கிறிஸ்து நமது உள்ளங்களிலே வரும்போது நமக்கு பெலன் உண்டாகிறது. ஆகவே அவருக்கு உங்கள் உள்ளங்களை கொடுங்கள்.

2. "நாம் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]" ([illegible])

நாம் பாவமில்லை செய்யவில்லையென்று நினைப்பது பொய் சொல்லுவதாகும். உண்மையாக யோசித்துப் பார்ப்போமானால் சில பெரிய பாவங்களை செய்திருக்கலாம். சில சின்ன பாவங்களை செய்திருக்கலாம். ஒரு பெரிய திருடனாலும் திருடன்தான், ஒரு சிறிய திருடனாலும் அவன் திருடன்தான். ஆகவே நம் வாழ்க்கையிலே சின்னதோ, பெரியதோ நமது தேவனுடைய பிரமாணங்களை நாம் மீறியிருப்போமானால், என் வாழ்க்கையை என் இஷ்டப்படி வாழுவேன் என்று நாம் பாவம் செய்திருக்கிறோம்.

[illegible] [illegible] [illegible] [illegible] நாம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவ அன்பு

சிலுவையிலே
தேவகுமாரனாகிய
இயேசு கிறிஸ்து
தமது
உயிரைக்
கொடுத்ததே
தேவன்
தம் அன்பை
வெளிப்படுத்தின
உச்சகட்டமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் காரியங்கள் நடந்தபின்பு



சாந்திபொன்னு

ஒரு சகோதரி தன் வாழ்வில் நடந்த வேதனை நிறைந்த சம்பவங்களைக் கோர்வையாக எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தாள். பல பிரச்சனைகள், பல விதமான பிரச்சனைகள், சங்கிலிக் கோர்வையாக சம்பவித்த அந்த சம்பவங்கள் அவளது இருதயத்தை இரணமாக்கியிருந்தது. "இறுதியில் எனக்கிருந்த ஒரே நம்பிக்கை என் தொழில்தான். அதுவே என் ஆறுதல், என் பெலன் எல்லாம். ஆனால், வாழ்வில் இவ்வளவு காரியங்களும் நடந்தபின்பு, இன்று என் தொழிலுக்கும் வேட்டுவைக்கும் விதத்தில் காரியங்கள் நடந்து விட்டன. ஏன் இப்படி? இனி நான் என்ன செய்வேன்" என்று கதறி அழுதாள் அவள். இப்படி ஒருநாளில் அழும் பெண், வெற்றியடைய வேண்டும் என்றுதான் அன்று ஆபிரகாமுக்கு நடந்தவற்றைத் தேவன் ஒவ்வொன்றாக எழுதிவைத்தாரோ என்று எனக்கு பின்பு எண்ணத்தோன்றியது.

### ஆபிரகாமின் பட்டப்படிப்பு:

தேவஅழைப்பை உதாசீனம் செய்யாத ஆபிராம் கீழ்ப்படிந்து புறப்பட்டார். தேவன் சொன்னதையும் செய்தார், சொல்லாததையும் செய்தார். அதுதான் லோத்துவைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டது. ஆனாலும் தேவஅழைப் புக்கிணங்கி விசுவாச வாழ்வை நோக்கிப் புறப் பட்டார் ஆபிராம். இது ஒரு பிள்ளை பள்ளிக்குச் செல்ல ஆயத்தமாவதுபோன்றது. வழியிலே பஞ்சத்தைக்கண்டு பயந்து எகிப்துக்கு வழி விலகிச் சென்று, அங்கே தன் மனைவியைச் சகோதரி என்று பொய் சொல்லி, தேவ கிருபையால் அங்கிருந்து மீண்டு வந்தபோது, அவர் விசுவாசப் படிப்பின் ஆரம்பப் பள்ளியைக் கடந்துவந்திருந்தார் எனலாம். லோத்துவைவிட்டுப் பிரிந்து தனியாகச் சென்றபோது, பள்ளிப்படிப்பை முடித்து அடுத்தபடிக்கு ஆயத்த மான நிலைதான் ஆபிரகாமினுடையது. யுத்தத்தில் வெற்றிபெற்று வந்தபோது, சோதோம் ராஜாவின் வெகுமதி களை மறுத்தபோது அவர் விசுவாச வாழ்வின் பட்டப்படிப்புக்குத் தகுதிபெற்றிருந்தார். நடுவிலே பலதடங்கல்கள் ஏற்பட்டபோதும், சோதோம் கொமோராவுக்காகப் போராடி ஜெபித்தபோது அவரிலே வளர்ச்சி காணப்பட்டது. அபிமெலேக்கின் அரண்மனையிலே கடிந்துகொள்ளப்பட்டபோதும், அவன் வீட்டாருக்காக ஜெபித்தபோதும், தன் மனைவியை மாசற்றவளாக அழைத்துக்கொண்டு புறப்பட்டபோதும் ஆபிரகாம் விசுவாச வாழ்வின் அடுத்தபடிக்குத் தயாரானார். ஆகாருக்குப் பிறந்த இஸ்மவேலையும் தாயையும் வீட்டைவிட்டு அனுப்பிவிட்டபோது, கடினமான ஒரு படிப்பை வெற்றிகரமாகத் தாண்டியிருந்தார் ஆபிரகாம். இப்போது தன் விசுவாச வாழ்வின் முதுகலைக் கல்விப் படிப்பின் படியில் நிற்கிறார் ஆபிரகாம். இதுதான் விசுவாச பரீட்சையின் இறுதிக்கட்டம். 'விசுவாச மார்க்கத்தாரின் தந்தை' என்ற பட்டம் அவருக்காகக் காத்திருந்தது. அதைப் பெற்றுக்கொள்ள கடினமான பரீட்சைக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

இத்தனை தடைகளும் தாண்டி வந்தபோதும், இந்த இடத்தில் அவர் சந்தித்த காரியம் அவர்முன்னே பூதாகரமாக நின்று அவரைப் பயமுறுத்தியது. இத்தனை காரியங்களையும் கடந்துவந்தது போதாதா? இவ்வளவும் நடந்த பின்பும்... இன்னமும் பரீட்சையா? ஆனால், ஆவியானவரோ, 'இவ்வளவும் நடந்தும்' என்று எழுதாமல், 'இந்தக் காரியங்கள் நடந்தபின்பு' என்று எழுதிவைத்திருப்பதை நாம் அவதானிக்கவேண்டும். கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, "உன் புத்திரனும், ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு மோரியா தேசத்துக்குப் போய் அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு" என்றார். அதாவது, இத்தனை இன்னல்களைத் தாண்டி வந்தும் ஆபிரகாமுக்கு இன்னுமொரு பரீட்சையோ? அல்ல. இத்தனை படிகளையும் ஆபிரகாம் தாண்டி வந்தது, இப்படியொரு பரீட்சைக்கு முகங்கொடுப்பதற்குத்தான் என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவீன ஆபிரகாம்:

இன்றைய நவீன ஆபிரகாம் ஒருவரை சற்று கற்பனைபண்ணிப் பார்ப்போமா! இந்த இடத்தில் அவர் தடுமாறி இருப்பார். ஏனெனில் ஆபிரகாமின் வாழ்வு "ஈசாக்கு" என்ற மகன்மீதே தொங்கிக்கொண்டிருந்தது. ஈசாக்குதான் ஆபிரகாமின் மந்திரம், ஜீவன், சொத்து சுகம், சுதந்திரம், மானம் மரியாதை, தகுதி அந்தஸ்து, ஏன் வருங்கால நம்பிக்கையே ஈசாக்குதான். செத்துப்போன சரீரம் உயிரடைந்து பெற்றெடுத்த பிள்ளை மாத்திரமல்ல, கர்த்தர் அருளிய வாக்கின் ஒரே நம்பிக்கை இந்த ஈசாக்குத்தான். மொத்தத்தில் ஆபிரகாமுக்கு ஒரு விக்கிரகமாக ஈசாக்கு மாறியிருந்தான். இந்நிலையில் நவீன ஆபிரகாம் நிச்சயமாக ஒரு ஆலோசனைக்கூடத்தை, ஒரு போதகரை, தீர்க்கதரிசி என்று தன்னை அறிமுகப்படுத்துபவரை நாடி போயிருப்பார். "ஐயா,இது தேவனால் உண்டானதா? சாத்தானால் உண்டானதா? ஜெபித்துச் சொல்லுங்கள். கர்த்தர் இப்படியொரு காரியத்தைக் கேட்கமாட்டாரே. ஏனெனில் ஈசாக்கு மரித்தால் கர்த்தரின் திட்டமே உருமாறிவிடுமே. என்னை அழைத்தவர், உண்மையுள்ளவர். அவர் ஆசிகளைத் தந்துவிட்டுத் தட்டிப்பறிக்கிறவர் அல்லவே!" இப்படி என்னவெல்லாம் சொல்லுவார் நவீன ஆபிரகாம். நவீன ஊழியர்களும், "இது உன் கற்பனை. தவறான எண்ணங்களைக் கொண்டுவருகிற சாத்தானை நீ வெல்லவேண்டும். இவன் கர்த்தர் கொடுத்த பிள்ளை. இவனில் யாருக்கும் உரிமை இல்லை" என்று சொல்லி, தேவைப்பட்டால் பிசாசும் துரத்துவார்கள். நவீன ஆபிரகாமும், "கர்த்தாவே,உமது சொல் கேட்டுத்தானே வந்தேன். நீர்தானே வாக்களித்தீர். இப்போது இக்காரியத்தால் என் மரியாதை மாத்திரமல்ல, உமது நாமத்துக்கும் அபகீர்த்தி உண்டாகுமே. எனக்கிருக்கும் ஒரே நம்பிக்கை போய்விடும், இவன் மரித்துப்போனால் உம்மைத்தான் மக்கள் குறைசொல்லுவார்கள். நீர் நல்லவர். தீமை செய்கிறவர் அல்ல. என் மனதில் தோன்றிய இந்த தவறான எண்ணத்தை அழித்துப்போடும். ஈசாக்கை ஆசீர்வதியும். உமது நாமத்துக்கு இழுக்கு வராதபடி இவனை ஆசீர்வதியும்" என்று என்னவெல்லாம் சொல்லி ஜெபித்திருப்பார் அல்லவா!

## தேர்வில் ஜெயித்த நிஜ ஆபிரகாம்:

ஆனால், நிஜமான ஆபிரகாமைக் குறித்து ஒரு காரியத்தைக் கவனித்தீர்களா? 'உன் மகன், உன் ஒரே மகன், உன் உயிரே அவன்தான் என்று எண்ணி இருந்தாயே' என்று கர்த்தர், ஆபிரகாமின் உண்மை நிலையை ஆபிரகாமுக்கு உணர்த்தினார். மகனைக் கொடுத்த கர்த்தரை விட்டுவிட்டு, தன் வாழ்வில் ஒரு முக்கிய இடத்தை மகனுக்குக் கொடுத்திருந்தார் ஆபிரகாம். கர்த்தர் அதைத்தான் அவருக்கு உணர்த் தினார். கர்த்தர் தம் பிள்ளைகள் வாழ்வில் முதலிடத்தில்தான் இருப்பார்; இல்லாவிட்டால் எந்த இடத்திலும் இருக்க மாட்டார். ஏனெனில் அவரே கர்த்தர். இதை உணர்ந்த ஆபிரகாம், தன் உயிர்மூச்சு என்று நம்பியிருந்த ஈசாக்கை சும்மாவல்ல; தகனபலியிடும்படி கர்த்தர் சொன்னபோது, கர்த்தரோடு எந்தவொரு வார்த்தையும் எதிர்த்து பேசியதாகவோ, தர்க்கம்செய்ததாகவோ எழுதப்படவில்லை.

மாத்திரமல்ல, இந்தக் காரியத்தைப் பின்போடவோ, மனைவியோடு கலந்தாலோசிக்கவோ, எனக்குப் பெலன் தாரும் என்று கர்த்தருடன் வாதிடவுமில்லை. அதிகாலையிலேயே ஆபிரகாம் தன் பயணத்தைத் தொடங்கிவிட்டார். ஒரு முதுகலைப் பட்டப்படிப்பின் பரீட்சையின் உச்சநிலைக்கு ஆபிரகாம் சென்றடைய மூன்று நாட்களை தேவன் நியமித்திருந்தார். இது அதிகம்போல நமக்குத் தோன்றவில்லையா. வெட்டு என்றால் வெட்டிவிட்டுப் போகிறார் ஆபிரகாம். ஆனால், மூன்று நாட்கள் பிரயாணத் தூரத்திலுள்ள மோரியா மலைக்கு ஆபிரகாம் செல்லவேண்டும். அங்கும் கர்த்தர் காட்டுகின்ற மலையில் ஈசாக்கைத் தகனபலியிடவேண்டும். இங்கே, 'விசுவாசமுள்ள கீழ்ப்படிவு' என்ற உயர்நிலைக்கு கர்த்தர் ஆபிரகாமை பயிற்றுவிப்பதைக் காண்கிறோம். அந்த மூன்றுநாட்களும் ஆபிரகாமின் உள்ளம் என்ன பாடுபட்டிருக்கும்! இனி ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கமுடியுமோ என்ற நிலைமையில், வாக்குப் பண்ணப்பட்ட மகனையே பலிகொடுக்கவேண்டிய நிலைமையில் எந்தவொரு தகப்பனாலும் அந்த சூழ்நிலையைச் சாதாரணமாக நினைக்கமுடியாது.

ஆனால், ஆபிரகாம் ஒரு அறிக்கை செய்தார். அவர் தன் வேலைக்காரரிடம், "..இங்கே காத்திருங்கள். நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும் போய், தொழுதுகொண்டு உங்களிடத்துக்குத் திரும்பி வருவோம்" என்றான். ஈசாக்கைப் பலியிடப்போவது தெரிந்தும், "திரும்பி வருவோம்" என்று ஆபிரகாம் அறிக்கையிட்டது எப்படி? இங்கே தான் ஆபிரகாமின் ஆவிக்குரிய முதிர்ச்சி வெளிப்பட ஆரம்பமாயிற்று. ஈசாக்கைப் பலியிட்டாலும், அவனை மீண்டும் கர்த்தர் தருவார் என்ற உள்ளுணர்வு ஆபிரகாமுக்குள் வந்தது எப்படி? அங்கேதான் ஆபிரகாம் கர்த்தரை நெருங்கிச் சேர்ந்திருந்தார் என்பது தெளிவாகிறது. தனக்கு வந்த பரீட்சையில் அவர் வெற்றி பெறுவார் என்ற சமிக்ஞை கொடுக்கப்பட்டாயிற்று. இப்போது பலிமேடையிலே கட்டப்பட்ட நிலையில் அமைதியாகக் கிடந்த ஈசாக்கை அதாவது தன் ஒரே நம்பிக்கையை, தான் நம்பியிருந்த எதிர்கால சந்தோஷத்தை, கர்த்தர் தந்த ஆசீர்வாதம் என்று தான் நம்பியிருந்த, இது ஒன்றுதான் தன் வாழ்வில் எல்லாம் என்று திட்டமாக எண்ணியிருந்த ஈசாக்கை வெட்டுவதற்கு தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தார் ஆபிரகாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம், ஆபிரகாம் முதல் தரத்தில் பரீட்சையில் தேர்ச்சிபெற்றுவிட்டார். ஈசாக்கை வெட்டுவதற்கு கையை நீட்டியபோது கர்த்தர் இடைபட்டார். "ஆபிரகாமே, ஆபிரகாமே" என்று அவசர அவசரமாக, ஒருதரத்துக்கு இரு தடவையாகக் கூப்பிட்டார். "பிள்ளையாண்டான்மேல் உன் கை யைப்போடாதே. அவனுக்கு ஒன்றும் செய்யாதே. நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல், எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்கு பயப்படுகிறவன் என்ற இப்பொழுது அறிந்திருக்கிறேன்" என்றார் கர்த்தர். தேர்வின் முடிவைக் கர்த்தர் அறிவித்துவிட்டார்.

பிரியமானவர்களே, கடந்த நாட்களில் நான் சந்தித்த அநேகர் கேட்ட கேள்விகளில் தொங்கிநின்ற காரியம் ஒன்றே ஒன்றுதான். "இத்தனை கஷ்டங்களும் போதாதென்று எனக்கிருக்கும் ஒரே நம்பிக் கையும் கெட்டுப்போகவேண்டுமா?" ஆபிரகாமும் இப்படியொரு கேள்வி யைக் கேட்டிருக்கலாம். ஆனால் அவர் கேட்கவில்லை. ஏன் தெரியுமா? இந்த உயர்நிலைப் பரீட்சைக்குத்தான் கடந்த 25ஆண்டு களுக்கும் மேலாக தேவன் தன்னைத் தயார் செய்திருந்தார் என்பதை அவர் உணர்ந்திருந்தார். இந்த சம்பவத்தின் பின்னர், ஆபிரகாமின் வாழ்வில் எந்தவொரு பரீட்சார்த்தமான சம்பவமும் நடக்கவில்லை என்பதையும் நாம் அவதானிக்கவேண்டும்.

முன்னர் குறிப்பிட்ட அந்த சகோதரியின் தொழிலில் பிரச்சனை தலை தூக்கியது. தொழில் ஒன்றுதான் வாழ்வின் நம்பிக்கை என்று நம்பியிருந்த அவளுடைய ஆறுதலும் கெட்டுப்போனது. ஆனால், அந்த நிலையில் தான் அவள் தேவபாதம் விழுந்தாள். தொழிலைப் பார்க்கிலும் கர்த்தரே உயர்ந்தவர், போதுமானவர் என்பதை உணர்ந்தாள். அப்போதுதான் அவள் வாழ்விலே பெரியதொரு மாற்றம் ஏற்பட்டது. தேவனருளிய அந்த மகத்தான விடுதலையை இரட்சிப்பை அவள் பெற்றுக்கொண்டாள்.

நமக்கென்று வைத்திருக்கும் நம்பிக்கை பாதுகாப்பு, எதிர்கால திட்டம், தேவன் அருளிய ஆசிகளைக்கூட கர்த்தருடைய நாமத்தினிமித்தம் நாம் இழக்கத் தயாராகும்போதுதான், நாம் உண்மையாகவே தேவனுடைய உள் உணர்வுடன் இணைகிறோம் என்பது உறுதிப்படுகிறது. ஒரு இழப்பு வரும் போது, கர்த்தர் நமக்குப் பெரியதொரு காரியத்தை பின்னால் வைத்திருப்பார் என உங்களால் விசுவாசிக்க கூடுமா? ஆபிரகாமின் வாழ்வில் அதைத்தான் கற்றுக்கொள்கிறோம். ஆபிரகாம் தேவனை விசுவாசித்தார். தேவன் அதைக் கனப்படுத்தினார்.

துக்க துயரம் இன்றி தேவ அன்பை நம்மால் அறிந்துகொள்வது கடினம். கெத்சமெனே இல்லாது உயிர்த்தெழு தல் இல்லை. சிலுவையின் தோல்வி இல்லாது உயிர்த்தெழுதலின் வெற்றி யும் இல்லை. எப்பொழுது நம் வாழ்வில் இனியும் இயலாதென்கிற நிலை வருகிறதோ, அங்கேதான் தேவகரம் நமக்காக உயர்ந்து நிற்கும் என்பதை ஒருபோதும் மறக்கவேண்டாம்.

இன்றைய வாழ்க்கைச் சூழலில் நாளுக்குநாள் எத்தனை இடர்கள், எத்தனை துயர்கள். ஆனால், கர்த்தரின் பிள்ளைகள் கலங்கவேண்டியதில்லை. நாம் தேவனுக்குக் கொடுக்கவேண்டிய முதலிடத்தை எந்தவொரு விடயத்துக்கும், அது பிள்ளையோ எதுவாகவோ இருந்தாலும் கொடுக்கக்கூடாது. ஆக, சிலசமயங்களில் நாம் நமக்கென்று கெட்டியாகப் பிடித்துவைத்திருப்பவற்றைத் தேவனுக்கென்று இழக்க நேரிடும். அப்பொழுதுதான் நமது விசுவாசமும் கீழ்ப் படிவும் பரீட்சை பார்க்கப்படும். அப் பரீட்சையில் நாம் ஜெயம்பெறவேண்டுமென்றால், நம் மனப்பான்மையை மாற்றிக்கொள்ளவேண்டும். "இனியும், இவ்வளவும் நடந்துமா" என்று கேள்வி எழுப்பாமல், "இந்தக் காரியங்கள் நடந்தபின்பு" என் வாழ்வில் வந்த உச்சக் கட்ட சோதனைதான் என்னை தேவனோடு நெருங்கிய உறவில் நிலைநிறுத்தியது என உங்களால் சொல்ல கூடுமானால் அதுதான் வாழ்வில் நாம் அடையக் கூடிய உன்னதமான வெற்றியாக அமையும்.

**இலங்கை**
சந்தாதாரரின் கவனத்திற்கு:




**ஏப்ரல் — மே 2013 முதல்**
**'சத்தியவசனம்'** மற்றும்
**'அனுதினமும் தேவனுடன்'**
ஆகிய இரு இதழ்களுக்குமான
வருட சந்தா ரூ. 800/= என்பதை
அன்புடன் அறியத்தருகிறோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

# இணைத்துக் கட்டும் திருமணம்



நமது பாவங்களை நாம் முற்றிலுமாக நியாயம் தீர்த்து நமது பாவத்தின் பயங்கரத்தை உணர்ந்து நமது தகுதியை அறிந்து, அறிக்கையிட்ட பின்னர் தேவனின் கிருபையைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுடையவர்களாகிறோம். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" என்று 1யோவா 1:9ல் கூறப்பட்டுள்ளது. இதன்பின் தேவன் நமது பாவங்களைத் திரும்ப நமக்கு எதிராக எண்ணமாட்டார். நாமும் அவைகளை நினைத்து நினைத்துக் கலங்கவேண்டியதில்லை. ஆனால் சாத்தான் அவைகளை அடிக்கடி நம்முன் நிறுத்தி நம்மை வருத்தி தேவ கிருபையை நாம் இழந்துவிட்டோம் என்று எண்ணச் செய்து செயல் அற்றவர்களாக்கிவிட முயற்சிக்கிறான். நாம் தேவனின் மன்னிப்பை இலவசமாக பெற்றுக்கொண்டோமானால், சாத்தானின் முயற்சிகள் அனைத்தும் தோல்வியுறும் என்பதில் ஐயமில்லை.

தாவீது தனது கொடிய பாவத்தை எண்ணிய போதெல்லாம் மேல்மாடிக்குச் சென்று கெஞ்சினான். அவனது பாவம் அவனை சிரந்தாழ்த்திக் கெஞ்ச வைத்தது. அதன் பலனாய் தேவனின் இரக்கம் எத்தனை பெரியது என்பதை அவன் அறிந்துக் கொண்டான். தேவ கிருபையால் மன்னிப்பையும், புதிய வாழ்வையும் பெற்றுக்கொண்டான். பின்னர் அவன் மனமகிழ்ச்சியோடு வாழ்ந்தான். மன்னிப்பை பெற்றுக்கொண்ட பின் தன் பழைய பாவத்தை எண்ணி எண்ணி கலங்கவில்லை. அவன் தாழ்மையுடனும் மகிழ்ச்சியுடனும் முடிவில்லாத தேவ கிருபையை ஏற்றுக்கொண்டான்.

தேவன் விரும்பியது என்னவென்பதை தாவீது கண்டான். எனவே அவன் அறிக்கையிடும்போது "பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்; தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்" எனக் கூறினான். தேவன் தாவீதைத் தள்ளிபோடவில்லை. பரிதாபத்திற்குரிய நிலையிலாக்கவில்லை. தேவன் தாவீதை தான் நேசிக்கும் ஒருவனாய் சரித்திரத்திலேயே இடம்பெறச் செய்தார். தாவீது பாவம் ஏற்றவனாயிருந்ததால் அல்ல, தன்னைத் தேவனுக்கு முன்பாக நிறுத்தி நியாயம் தீர்த்து விசுவாசத்தினால் சர்வ வல்லவரின் இரக்கத்தைப் பெற்றுக்கொண்டதினால்தான் வரலாற்றில் முக்கியமானதோர் இடத்தைப் பெற்றுக்கொண்டான்.

ஒருநாள் ஒரு கிறிஸ்தவ ஊழியர் என்னிடம் உதவி பெற்றுக்கொள்வதற்காக வந்தார். அவர் தனது மனைவியிடமிருந்து பிரிந்து வாழ்ந்த அவர், இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்துக்கொள்ள விரும்பினார். பலமணிநேரம் என்னோடு பேசி, பல சாக்குபோக்குகளைக் கூறி அடுத்த பெண்ணை மணப்பது குற்றமல்ல என்பதாக நியாய வாதம் கூறினான். தான் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டாலும் அதைத் தேவன் மன்னிப்பார் என்ற நம்பிக்கையுடன் பேசினார். இது துணிகர பாவமாயிற்றே.

இன்னொரு நாள் பாவம் செய்தமையால் மனம் வருந்தி கொண்டிருந்த ஒருவர் என்னிடம் வந்தார். அவர் என்னோடு ஒன்றரை மணி நேரம் தனது தனது பாவத்தைக்குறித்து பேசி கலங்கினார். அவர் தேவ இரகத்தை பெற்றுக்கொள்ள ஆவலாயிருந்தார். அவரது இருதயம் உடைந்திருந்தது. அவர் இன்று தேவ கிருபையால் தேவனின் களிகூர்ந்து நலமுடன் வாழ்கிறார். நாமும் நமது பாவத்தை ஒப்புக்கொண்டு விசுவாசத்தின் மூலம் தேவ மன்னிப்பைப் பெற்றுகொள்வோமானால் நாம் தேவனோடுள்ள உறவில் புதுபிக்கப்படுவோம்.

தாவீது இந்த நிலைமையையும் தாண்டிச் சென்றிருந்தார். "அப்பொழுது பாதகருக்கு உமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள். ஆம் தேவனே, என்னை இரட்சிக்கும் தேவனே, இரத்தப் பழிகளுக்கு என்னை நீங்கலாக்கி விடும்; அப்பொழுது என் நாவு உம்முடைய நீதியைக் கெம்பீரமாய் பாடும். ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும்; அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்" என்று உள்ளமுருக தாவீது பொருத்தனை பண்ணினான்.

இதை வாசிக்கும் அன்பான தோழரே, நீ தேவனோடுள்ள உறவிலிருந்து விலகியிருந்தால் இன்றே அவரிடம் திரும்பு. சங்கீதம் 51ன் படி தேவனுக்கு முன்பாக நீயே உன்னை நியாயந்தீர்த்து பாவத்தை அறிக்கையிடும் வரையிலும் இச்சங்கீதத்தை உன் ஜெபமாக்கிக்கொள். அவரது பூரண மன்னிப்பை 1யோவான் 1:9ல் கூறப்பட்டுள்ளபடி பெற்றுக்கொள். தேவனின் அளவற்ற இரத்தத்திற்காக ஸ்தோத்திரம் செலுத்தத் தவறாதே. விசுவாசத்தால் வெற்றியைப் பெற்றுக்கொள். கடந்ததை எண்ணிக் கவலையுறுவதை விட்டுவிடு. அவரது பரிபூரண அன்பில் மகிழ்ந்திரு.

## எச்சரிப்புகள்

கீழே சில எச்சரிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை நமக்கு மிகவும் பிரயோஜனமானவை. முதல் எச்சரிப்பை கலாத்தியர் 5:13ல் பார்க்கலாம். தேவன் காட்டும் இரக்கம் நாம் பாவம் செய்வதற்கு கொடுக்கப்படும் அனுமதி என்று எண்ணாதீர் என இவ்வசனம் எச்சரிக்கின்றது. "சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்".

இரண்டாவது எச்சரிப்பு தாவீதின் அனுபவத்தின் மூலம் தரப்படுகிறது. பாவம் செய்தாலும் மன்னிப்பைப் பெறலாம் என்ற எண்ணத்துடன் செய்யப்படும் துணிகர பாவத்தைப் பற்றி தாவீதின் அனுபவத்திலிருந்து சில உண்மைகளைக் காணலாம். தேவன் இரக்கமுள்ளவராகவும், நீடிய பொறுமையுடையவருமாய் இருக்கிறார் என்ற எண்ணத்தில் பாவ வழியில் முன்னேறிச் செய்ய இவ்வெண்ணம் வழிவகுக்கின்றது. ஒருவேளை இதைப் படிக்கின்ற நீ "திருமணமான ஒருவரை திருமணம் செய்யலாம். விவாகரத்து செய்யலாம், மறுப்டி திருமணம் செய்யலாம். பின்னர் பாவ மன்னிப்பை பெற்றுக்கொள்ளலாமே" என்ற துணிகரம் கொள்கின்றாயா? அவ்விதம் நினையாதே!

அவ்வித நினைவால் செய்யப்படும் இப்பெரிய பாவத்தின் விளைவை எண்ணித்தான் தாவீது 19ம் சங்கீதம் 13ம் வசனத்தில் கீழ்காணுமாறு கூறினான். "துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும் பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன்" உண்மையை அறிந்தும், அறிந்துகொண்ட தேவ சித்தத்திற்கு எதிராகவும் பாவம்செய்தால் அது மிகக் கொடிய துணிகரமான பாவமாகும். துணிகர பாவத்திற்கும் தேவ கிருபையால் மன்னிப்புக் கிடைக்கும் என்று எண்ணுவோரை நினைக்கும்போது என் உள்ளம் நடுங்குகின்றது.

"நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள் (ரோமர் 6:12-14) நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது."

"உம்முடைய வார்த்தையிலே என் காலடிகளை நிலைப்படுத்தி, ஒரு அநியாயமும் என்னை ஆளவொட்டாதேயும்." பாவம் நமது சரீரத்தை ஆள கூடாது, என்று மேற்கூறிய வசனங்களால் நாம் உணர்த்தப்படுகிறோம்.

கிறிஸ்தவன் சத்தியத்தை அறிந்திருந்தும் துணிகரமாகவும், தொடர்ந்தும் பாவம்செய்தால், அவன் மேல் தேவ தண்டனை கடுமையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இது நமக்கு தரப்படுகின்ற மூன்றாவது எச்சரிப்பு. தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். மரணத்திற்கு ஏதுவான பாவம் என்பதாக ஒன்றுண்டு என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும்.

**நாமும் நமது பாவத்தை ஒப்புக்கொண்டு விசுவாசத்தின் மூலம்**
**தேவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்வோமானால்**
**நாம் தேவனோடுள்ள உறவில் புதுபிக்கப்படுவோம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரையறைக்குட்பட்ட ஊழியம்


நான்காவது எச்சரிப்பு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிய நிருபங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. திருமணநிலைமையானது ஒருவர் கர்த்தருக்கு செய்கிற ஊழியத்தை மட்டுப்படுத்தக்கூடும் என்று அறிகிறோம். தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, "கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான், இது உண்மையான வார்த்தை. ஆகையால் கண்காணியான வன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நி யரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாயிருக்க வேண்டும். அவன் மதுபான பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பண ஆசையில்லாதவனுமாயிருந்து, தன் சொந்தக் குடும் பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்" (1தீமோ 3:1-5) என்று குறிப்பிட்டுள்ளார்.

தீத்துவுக்கு பவுல் கூறுகிறார், "நீ குறைவாய் இருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னை கிரேத்தா தீவிலே விட்டுவந்தேனே. குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியையுடைய புருஷனும், துன்மார்க்கரென் றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாச முள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவன் இருந்தால் அவனையே ஏற்படுத்தலாம். ஏனெனில், கண் காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக் கேற்றவிதமாய், குற்றஞ்சாட்டப்படாதவனும், தன் இஷ்ட படி செய்யாதவனும், முற்கோபமில்லாதவனும், மதுபான பிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாய த்தை இச்சியாதவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், நல்லோர்மேல் பிரியமுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ள வனும், நீதிமானும், பரிசுத்தவானும், இச்சையடக்க முள்ளவனும், ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான் போதிக்கப் பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவனுமாய் இருக்கவேண்டும்" (தீத்து 1:7-9) இக்கால முறையின்படி கண்காணி எனப்படுபவர் சபையின் போதகராவார். அவர் ஒரு மனைவியை உடையவராக இருப்பதில் நம்பிக்கை உள்ளவராகவும், திருமணம், மரணம்வரை பிரிக்கப்படக்கூடாத ஓர் உறவு என்பதை நம்பிச் செயல்படுகிறவருமாயிருக்கவேண்டும்.

மூப்பனாக(டீக்கன்) இருப்பதற்கான தகுதியும் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ளது. "உதவிக்கார ரானவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்கவேண்டும். இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிற வர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தை யும் அடைவார்கள்" (1தீமோ 3:12,13) ஆகவே விவாக ரத்து செய்தவர்கள், பின்னர் மறுமணம் செய்தவர்கள் (பின்னர் இரட்சிக்கப்பட்டவர்கள்) ஆகியோரை தேவன் தமது ஊழியத்தில் உபயோகிக்கமாட்டார் என பொருள் கொள்ள வேண்டாம். ஆனால் இது அவர்களது ஊழியத்தின் எல்லையை வெகுவாய்க் குறைக்கிறது.

இப் புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ள கருத்துகள் உன் வாழ்க்கைக்குப் பொருந்துவதாய் இருந்தால் முதலில் ஜெபநிலையில் 51ம் சங்கீதத்தைப்படி. பின்னர் 32ம் சங்கீதத்தைப் படி முதலாவது தாவீது எவ்விதம் மன்னிப்பைப் பெற்றுக்கொண்டான் என்பதையும், இரண்டாவது அவர் தேவனின் அதிகமான இரக்கத்தை எவ்விதம் பெற்று மகிழ்ந்தான் என்பதையும் கண்டு கொள்வாய். ஆம்! நிச்சயமாய் இச்செய்தி உனக்கு நல்ல பலனளிக்கும்.

எப்போதும் பார் இயேசுவை! சரணடை அவர் பாதத்தண்டை! உன்னை அவர் சிறப்புற நடத்துவார்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவமார்க்கம்

"ஜீவமார்க்கத்தை எனக்கு தெரியப்படுத்துவீர்..." சங்கீதம் 16:11 கர்த்தர் தாமாகவே இப்பெரிய பிரபஞ்சத்தை உருவாக்கினார். ஆனால் மனிதன் சிருஷ்டிப்பில் விளங்கும் பிரமாணம் ஒற்றுமை வல்லமை ஞானம் மகிமை முதலானவைகளை உணர்ந்து ஆனந்த பரவசமடைந்து, கர்த்தாவே இவை யாவற்றையும் எவ்வளவு அதியமாகப் படைத்தீரென்று சொல்லி, அவர் தனது குமாரன் மூலமாக மகத்தான இரட்சிப்பை உண்டாக்கியிருக்கிறார். மனித சமூகம் சிலுவையின் இரகசியத்தை நன்கு உணர்ந்து கிறிஸ்துமூலமாக பிதாவுடன் ஒப்புரவாகும்போதுதான் கர்த்தரின் ஜீவமார்க்கத்தைக் காண்கிறான். அவ்வாறே, கர்த்தரில்லாமல் மனிதன் தானாகக் கடைப்பிடிக்கும் ஆசாரங்களும் பாரம்பரிய வழிமுறைகளும் மெய்யான மார்க்கமாகாது.

இதனை இக்காலங்களிலே அநேக மக்கள் சிந்திப்பதில்லை. மார்க்கத்தின் பெயராலே ஏதோ சில கடமைகளை நிறைவேற்றிவிட்டால் அதுவே மார்க்கமென்று எண்ணுகி றார்கள். கிறிஸ்து இன்னாரென்று அறிவதுல்லை, அவரோடு ஐக்கியப்பட முற்படுவதுமில்லை. கிறிஸ்துவை அறியாமல் நாம் நிறைவேற்றும் கடமைகள் நமக்குத் திருப்தியாக இருந்தாலும் அது ஜீவமார்க்கமாகாது. மனித சமூகம் தனக்குத்தானே செய்துகொள்ளும் காரியங்கள் மனித மார்க்கமேயன்றி தேவ மார்க்கமாகாது. கர்த்தரும் மனிதனும் ஐக்கியப்படுவதே மெய்யான ஜீவமார்க்க மாகும். ஆபிரகாமின் தேவனே! ஈசாக்கின் தேவனே யாக்கோபின் தேவனே என்று வீணாக நாம் சொல்லிக்கொண்டிருப்பதில் எதுவித அர்த்தமும் இல்லை. முற்பிதாக்கள் என்றாலும் அப்போஸ்தலர்கள் என்றாலும் அவர்கள் கர்த்தரைத் தேடி, அவரை நம்பி அவரால் நடத்தப்பட்டதைப்போல நாமும் நடத்தப்படும் படிக்கு நமக்கு திருஷ்டாங்கங்களாகக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

2

கடவுள், மற்றவர்களுக்கு செய்யப்பட்டதான காரியங்களைக் குறித்து நாம் மேன்மைபாராட்டி கொண்டிருக்காமல் நமக்கு வேண்டியதான ஜீவ மார்க்கத்தின் வழியென்ன எனவும் நாம் ஆராய முற்படவேண்டும் ஜீவமார்க்கத்தை உனக்கு தெரியப் படுத்துவீர். மற்றவர்களுக்கு தெரியப்படுத்தினதுபோல எனக்கு தெரியப்படுத்துவீர். அவ்வாறு கர்த்தர் எமக்குத் தெரியப்படுத்தும் போதுதான் ஜீவமார்க்கத்தின் அனுபவம் எமக்கும் உண்டாகும். கர்த்தர் எம்மோடுகூடயிருந்து நம்மை நடத்துவதாக வாக்குப் பண்ணியிருக்கிறார். நமக்கு வாக்குப்பண்ணினவர் உண்மை யுள்ளவர். அவ்வாக்கினை எமது அனுபவத்தில் காண்பதே ஜீவ மார்க்கமாகும். நமது தினசரி வாழ்க்கையில் கிறிஸ்து நம்மை நடத்துவதே நமக்கு ஜீவமார்க்க மாகும். தாவீது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை பற்றி சொன்னவுடனே ஜீவமார்க்கத்தைப் பற்றி பேசுகிறார் உயிர்த்தெழுந்த ஆண்டவர் தமது புதிய ஜீவனாகிய பரிசுத்த ஆவியால் நம்மை நடத்துவதே எமக்குரிய ஜீவ மார்க்கமாகும். ஆம், ஆபிரகாமை நடத்தினவர், இஸ்ரவேலை நடத்தினவர், தாவீதை நடத்தினவர் இன்று நம்மையும் வழி நடத்துபவர். அவ்வாறாயின், கிறிஸ்துவின் மகிமையை திட்டமாக அறிந்து வழி நடந்து செல்வதே எமக்குரிய ஜீவ மார்க்கமாகும். இதனை இறையியலாளர்கள் நான்கு வகையில் பிரித்தாய்வு செய்கின்றனர்.

3 வேதவா
நம்பிக்
வேண்

4 காத்திருக்க
வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 வேதவசன ஆராய்ச்சி வேண்டும்

"நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்." வேதாகமம் நமது பாதைக்கு ஒளி. வேதாகமத்தை அசட்டை செய்கிறவன் இருளில் நடக்கிறான். தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் தீமையில் சிக்கிக்கொள்கிறான். வேதாகமத்தை ஒழுங்காகக் வாசித்து வருகின்றவர்கள் தங்களுக்கடுத்த காரியங்களில் தேவசித்தமின்ன தென்பதை நன்கு அறிந்துகொள்கிறார்கள். வசனங்களின் மூலமாக பிதா தமது சித்தம் இன்னதென்று தமது பிள்ளைகளுக்குத் தெரியப்படுத்துகின்றார். இதுவே அவரை அறிந்தவர்களுடைய ஜீவமார்க்கமாகும்.

## ஊக்கமான ஜெபம் வேண்டும்

நமது சங்கடங்களை உள்ளபடியே பிதாவுக்கு சொல்லவேண்டும். இவ்வாறு ஜெபிக்கையில் தொலைபேசியில் பேசும்போதே உடன் பதில் கிடைப்பதைபோல, தேவசத்தம் உள்ளத்தில் தொனிக்கும். மயக்கமான விடயங்களில் உடனே தெளிவுண்டாகும். ஒரு காரியத்தை செய்யலாம், அல்லது செய்யக்கூடாதென்ற நிச்சயமுண்டாகும். காரியத்தை செய்யலாம் அல்லது செய்யக்கூடாதென்ற நிச்சயம் உண்மையான இறைமக்களுடைய ஊக்கமான ஜெபங்கள் மூலமாகவும் ஜீவமார்க்கம் தெரியப்படுத்தப்படலாம். தொடர்ந்து ஜெபங்களில் ஈடுபடாவிட்டால் ஜீவமார்க்கத்தின் மகிமையை இழக்க நேரிடலாம்.

## க்கில் கை டும்

ஏராளமான வாக்குத்தத்தங்களை கிறிஸ்து எமக்கு கொடுத்திருக்கின்றார். அவை நாணயமாக மாற்றப்படாததால் காகிதச் செக்குகளாகவேயிருந்து தூங்குகின்றன. நம்பிக்கையெனும் வங்கியிலே அவைகளை மாற்றவேண்டும். இதற்கு ஆபிரகாம் சரித்திரம் நமக்கு நல்லதொரு ஆதாரம். அவர் நம்ப ஏதுயில்லாத சந்தர்ப்பத்திலும்கூட இறைவாக்கை நம்பி விசுவாசத்தில் வெற்றியடைந்தார். நமது காரியங்கள் சம்பந்தமான வாக்குகள் நமது உள்ளத்தில் தொனிக்கின்றன. அவைகளை உறுதியாய் நம்பவேண்டும். நம்பும்போது பிதா அவைகளை நமக்கு பலிக்கப்பண்ணுவார். எத்தனை இடையூறுகள் ஏற்பட்டாலும், தேவ வாக்கை உறுதியாய்ப் பற்றிப் பிடிக்கவேண்டும்.

ஊக்கமான ஜெபம் உத்தரவைக்கொண்டு வரும். தாமதித்தாலும் வாக்கை நம்பவேண்டும். இன்னும் தாமதித்தாலும் கர்த்தருக்காக பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். இவ்வாறு காத்திருந்த பக்தர்கள் தேவ வழிநடத்து தலைக் கண்டார்கள். கிறிஸ்துவை அறிந்த மக்களுக்கு ஆத்திரமும் அவசரமும் கூடாது. கிறிஸ்து நம்பி காத்திருக்கும் பிள்ளைகளுக்கு அவர்கள் எதிர்ப்பார்த்திருக்கும் நன்மைகளைப் பார்க்கிலும் மேலான நன்மைகளைத் தருவார். நித்தியமான ஜீவமார்க்கத்தின் வழிகள் மகா ஆச்சரியமானது. தேவனே உமக்கு காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை நீரேயல்லாமல் உலகத்தோற்ற முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை செவியால் உணர்ந்ததுமில்லை (ஏசாயா 64:4) இதுவே ஜீவமார்க்கம். கிறிஸ்துவோடு சஞ்சரிப்பதே ஜீவமார்க்கம். கர்த்தர் நம்மை நடத்துவதை அறிந்து வாழ்வதே ஜீவமார்க்கம். இதுவே நம் எல்லோருடைய அனுபவமார்க்கமாக வேண்டும். உலகத்தின் பாதை மனுஷமார்க்கம். கர்த்தருடைய பிள்ளைகளின் வாழ்வோ ஜீவமார்க்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றைக் கடக்கும் அற்புதம் - 2



எம்.எஸ்.வசந்தகுமார்


## மூன்று நடைமுறைக் காரியங்கள்

யோர்தான் நதிக்கரையில் மூன்று நாட்கள் தங்கியிருந்த காலத்தில், நதியைக் கடப்பதற்கான ஆயத்த செயல்களில் யோசுவா ஈடுபட்டான். வெள்ளம் கரைபுரண்டு ஓடிய அரை மைல்வரை அகலமாயிருந்த ஆற்றை எவ்வாறு கடப்பது என்பதை அறியாதிருந்தா லும், தேவனுடைய உதவியுடன் அதை எப்படியும் கடந்துவிடலாம் என்னும் நம்பிக்கை யோசுவாவுக்கு இருந்ததினாலேயே அவன் ஆற்றைக் கடப்பதற்கான ஆயத்தங்களைச் செய்தான். இத்தகைய நம்பிக்கை இல்லாதிருந்தால் அவன் எதுவும் செய்யாமல் பேசாமல் இருந்திருப்பான். யோசுவாவைப்போல கர்த்தர் செயல் படுவதற்காக நாம் காத்திருக்கும் காலத்தில் நாம் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யவேண்டும். பிரச்சனை தீர்க்கமுடியாத அளவு பெரிதாக இருக்கும் போது, எதிரிடையான மனதுடன் சோர்வடைந்துபோய் நாம் செய்யவேண்டியவைகளைச் செய்யாமல் இருந்து விடக்கூடாது. யோர்தான் நதியைக் கடப்ப தற்காகக் காத்திருந்த காலத்தில் யோசுவா மூன்று காரியங்களைச் செய்யும்படி மக்களுக்கு கூறுகின்றான். இவை யோர்தான் நதியைக் கடப்பதற்காக இஸ்ரவேல் மக்கள் செய்ய வேண்டிய ஆயத்த செயல்களாக இருந்தன.

**1 மக்களின் பார்வை**(யோசு.3:2-4): யோர்தான் நதியைக் கடப்பதற்கு இஸ்ரவேல் மக்கள் செய்யவேண்டியிருந்த முதலாவது ஆயத்த செயல் அவர்களுடைய பார்வையுடன் தொடர்புடையது. அதாவது, அவர்கள் "தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியைப்" பார்த்தவாறு யோர்தான் நதியைக் கடக்க வேண்டியவர்களாக இருந்தனர். 4.5 அடிகள் நீளமும், 2.5 அடிகள் அகலமும், 2.5 அடிகள் உயரமுமான இப் பெட்டியைப்பற்றி யாத்திராகமம் 25:10-22ல் நாம் வாசிக்கலாம். ஆரம்பத்தில் ஆசரிப்புக் கூடாரத்திலும் பின்னர் ஆலயத்திலும் வைக்கப்பட்டிருந்த இப்பெட்டி அக்காலத்தில் தேவனுடைய பிரசன்னத்திற்கான அடை யாளமாக இருந்தது (எண்.7:89, 10:35-36, யாத்.25:22, 1சாமு.4:4) இப்பெட்டியின் மேற்பகுதியில் இருபுறத்திலும் சேராபீன்களுக்கு நடுவில் காத்தருடைய மகிமை தங்கி யிருந்ததினால், இது கர்த்தருடைய சிங்காசனமாயிருந் தது. இங்கு மனிதருடைய கண்களுக்குப் புலப்படாத விதத்தில் தேவன் வாசமாயிருந்தார் (1சாமு.4:4, 2சாமு. 6:2, சங்.80:1,99:1) ஆசாரியர்கள் இப்பெட்டியைச் சுமந்து செல்லும்போது மக்கள் இதைப் பார்த்தவாறு யோர்தான் நதியைக் கடக்கும் தங்களுடைய பிரயாணத்தை ஆரம்பிக்க வேண்டியவர்களாய் இருந்தனர்.

மூன்றுநாள் சென்றபின்பு, அதிபதிகள் பாளயம் எங்கும் போய், ஜனங்களை நோக்கி: நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக் கைப் பெட்டியையும் அதைச் சுமக்கிற

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



லேவியராகிய ஆசாரியர்களையும் கண்டவுடனே, நீங்களும் உங்கள் இடத்தைவிட்டுப் பிரயாணப் பட்டு, அதற்குப் பின்செல்லுங்கள். உங்களுக்கும் அதற்கும் இடையிலே இரண்டாயிரம் முழத்தூர மான இடம் இருக்கவேண்டும். நீங்கள் நடக்க வேண்டிய வழியை அறியும்படிக்கு, அதற்குச் சமீபமாய் வராதிருப்பீர்களாக. இதற்கு முன்னே நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்துபோக வில்லை என்று சொல்லி கட்டளையிட்டார்கள் (யோசுவா.3:2-4).

இவ்வசனங்களில் ஜனங்களின் அதிபதிகள் மக்களுக்கு கொடுக்கும் அறிவுறுத்தல், யோசுவா அதிபதிகளுக்குக் கொடுத்த கட்டளையாய் உள்ளது. அதாவது, யோசுவா அதிபதிகளுக்கு கொடுத்த கட்டளையையே அவர்கள் மக்களுக்கு கொடுத்தனர். இதேவிதமான செயல்முறையை நாம் யோசுவா 1:10-11 லும் அவதானிக்கலாம். இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியைக் கடப்பதற்காகச் செல்லும்போது முதலில் ஆசாரியர்கள் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்து செல்லவேண்டும் என்றும், ஜனங்கள் இவர்களை இரண்டாயிரம் முழதூரத்தில் பின்தொடர்ந்து செல்லவேண்டும் என்றும் இஸ்ரவேல் மக்கள் அறிவுறுத் தப்பட்டனர். ஒரு முழம் 18 அங்குலங்களாகும். எனவே, இரண்டாயிரம் முழங்கள் 3000 அடிகளாக, ஏறக்குறைய அரை மைல் தூரமாக இருந்தது.

தேவனே இஸ்ரவேல் மக்களை வழிநடத்திச் செல்லப்போவதனால் அவருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாய் இருக்கும் உடன்படிக்கைப் பெட்டியை அவர்கள் பின்தொடர்ந்து செல்ல வேண்டியவர்களாய் இருந்தனர். உண்மையில், "உடன்படிக்கைப் பெட்டியின் அசைவானது தேவனுடைய அசைவாக, அதாவது, அது ஓரிடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்குச் செல்வது தேவன் ஓரிடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்குச் செல்வதாகவே இருந்தது (எண்.10:35)." மக்களுக்கு முன்பாக உடன்படிக்கை பெட்டி சென்றதனால், "தேவன் அவர்களுக்கு முன்பாகச் சென்று அவர்கள் செல்வதற் கான பாதையை உருவாக்கிக் கொடுத்தார்." இதனால், மக்கள் அனைவரும் உடன்படிக்கைப் பெட்டியைப் பார்க்கக்கூடிய விதத்தில் இரண்டாயிரம் முழத்தூரத்தில் அதைப் பின்தொடரும்படி அறிவுறுத்தப்பட்டனர்.

இதனால்தான் "நீங்கள் நடக்க வேண்டிய வழியை அறியும்படி அதற்கு சமீபமாய் வராதிருப்பீர்களாக" என்னும் அறிவுறுத்தல் மக்களுக்கு கொடுக் கப்பட்டது. அக்காலத்தில் இஸ்ரவேல்மக்களின் தொகை 2 மில்லியனுக்கும் அதிகமாக இருந்ததி னால், மக்கள் உடன்படிக்கைப்பெட்டிக்கு அருகில் சென்றால் எல்லோராலும் அதைப் பார்க்க முடியாது இருந்திருக்கும். இதனால், எல்லாரும் உடன்படிக் கைப்பெட்டியைப் பார்த்தவாறு செல்லக்கூடிய அளவு தூரத்தில் அதை பின்தொடர்ந்து செல்லும்படி அவர்க ளுக்கு கூறப்பட்டது. உண்மையில், உடன்படிக்கைப் பெட்டியைப் பார்த்தவாறு சென்றால் மாத்திரமே தாம் செல்லவேண்டிய வழியை அவர்கள் அறிந்துகொள்ளக் கூடியவர்களாக இருந்தனர். இதைப்போலவே, நம் வழிகள் எல்லாவற்றிலும் நாம் தேவனை பார்த்தவாறு சென்றால் மாத்திரமே நம்மால் இவ்வுலக வாழ்க்கைப் பயணத்தை தொடர்ந்திட முடியும். இதனால்தான், "உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள். அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்துவார்" என்று நீதிமொழி 3:6 அறிவுறுத்துகிறது.

யோசுவாவின் காலத்தில் உடன்படிக்கைப் பெட்டி தேவனுடைய பிரசன்னத்துக்கான அடையாள மாக இருந்ததுபோல தற்காலத்தில் தேவனுடைய பிரசன்னத்தை அடையாளப்படுத்தும் பொருட்கள் எதுவும் இல்லை. ஆனாலும் தேவன் நம்மோடு எப்பொழுதும் இருக்கின்றார் (எபி.13:5ஆ). இதனால், நாம் நம்வழிகள் எல்லாவற்றிலும் அவரையே நேக்கிப் பார்த்தவர்களாகச் செல்லவேண்டும். "விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமை யோடே ஓடக்கடவோம்" என்று வேதாகமம் அறிவுறுத்து கிறது (எபி.12:1). எனவே புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழும் நாம் எப்பொழுதும் எல்லாச் சூழ்நிலைகளிலும் இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்த்தவர்களாக வாழ வேண்டும். நெருக்கடியான சூழ்நிலைகளில் நாம் அச் சூழ்நிலையைப் பார்த்து பயந்துபோய்விடக் கூடாது. இயேசுவை நோக்கிப் பார்த்தவனாக கடலின்மீது நடந்து சென்ற பேதுரு, எச்சந்தர்ப்பத்தில் இயேசுவின் மீதிருந்த தன்னுடைய பார்வையைக் கொந்தளிக்கும் கடலின்மீது திருப்பினானோ அச்சந்தர்ப்பத்தில் அவன் கடலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமிழ்ந்து போக தொடங்கினான். இதைப் போலவே, நாமும் இயேசுவின் மீதிருக்கும் நம்முடைய பார்வையை வாழ்வின் நெருக்கடிகளின் பக்கம் திருப்பினால் நாமும் வாழ்வில் முன்னோக்கிச் செல்ல முடியாதவர்களாக விழுந்துபோவோம். எனவே, நாம் எப்பொழுதும், எல்லாச் சூழ்நிலைகளிலும் இயேசுவை நோக்கிப் பார்த்தவர்களாக நம்முடைய வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்திட வேண்டும்.

இஸ்ரவேல் மக்களுக்கு யோசுவாவின் அறிவுறுத்தலைக் கொடுக்கும் அதிபதிகள், "இதற்கு முன்னே நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்து போகவில்லை" என்றும் கூறுகின்றனர். உண்மையில், யோர்தான் நதியைக் கடந்துசெல்லும் பாதையில் எவருமே அதுவரை சென்றிருக்கவில்லை. இதனால், "தேவன் அவர்கள் செல்லவேண்டிய பாதையை அவர்களுக்கு காண்பிப்பதற்காக அவர்களுக்கு முன்னே சென்றார்." வாக்குத்தத்த பூமிக்குள் செல்வதற்கு வேறு பாதைகள் அக்காலத்தில் இருந்தபோதிலும், எவரும் செல்லாத ஆற்றின் நடுவில் பாதையை உருவாக்கி தேவன் அவர்களை வாக்குத்தத்த தேசத்திற்குள் அழைத்துச் செல்கின்றார். இதைப்போலவே, நாம் செல்வதற்குப் பாதைகளே இல்லாத இடத்திலும் தேவன் அற்புதமாகப் பாதைகளை உருவாக்கி நம்மை வழி நடத்திச் செல்பவராக இருக்கின்றார். "அவர் நம்மைத் தனியே எங்கும் அனுப்புவதில்லை. நம்மை வழிநடத்திச் செல்லும் அவர் எப்பொழுதும் நம்முடனே வருகின்றார். எனவே, நாம் தனியாகப் பிரயாணம் செய்து தடுமாறுகிறவர்களாக அல்ல, பாதைகள் இல்லாத இடத்திலும் நமக்குப் பாதைகள் தெரியாத வழிகளிலும் நாம் செல்வதற்கான பாதையை உருவாக்கித் தந்து நம் முன்னே செல்லும் தேவனுடன் நாம் பயணம் செய்கிறவர்களாக இருக்கின்றோம்." வாழ்க்கைப் பயணத்தில் தேவன் நம்முடைய வழித்துணையாக, நமக்கு பாதையைக் காண்பிக்கும் வழிகாட்டியாக இருக்கின்றார். அவர் காண்பிக்கும் வழியில் செல்வதே நமக்கு ஆசீர்வாதமாய் இருக்கும்.

யோசுவா ஜனங்களை நோக்கி: உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள். நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார் என்றான் (யோசு.3:5)

**2 மக்களின் பரிசுத்தம்** (யோசுவா 3:5): இரண்டாவதாக, இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியைக் கடப்பதற்காகத் தேவன் அற்புதம் செய்வதற்கு அவர்கள் தங்களைப் பரிசுத்தப்படுத்த வேண்டியவர்களாய் இருந்தனர்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பரிசுத்தம் செய்வது வெளிப்பிரகாரமான செயல்களாக இருந்தன. இஸ்ரவேல் மக்கள் சீனாய் மலையடிவாரத்தில் இருக்கும் காலத்தில் தேவன் அவர்கள் மத்தியில் பிரசன்னமாவதற்கு முன்னர் அவர்களைப் பரிசுத்தம்பண்ணிக் கொள்ளும்படி அறிவுறுத்தியபோது, அவர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து சுத்தம்பண்ணுவதும் பாலுறவில் ஈடுபடாதிருப்பதும் தங்களைப் பரிசுத்தம் பண்ணும் செயல்களாக இருந்தன(யாத்.19:10, 19:14-15). எனவே, இங்கும் இதேவிதமான அறிவுறுத்தலே மக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கவேண்டும் என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். லேவியராகமம் 14ம் 15ம் அதிகாரங்களைக் கருத்திற்கொள்ளும்போது, சரீரத்தைக் கழுவி சுத்திகரிப்பதையும் (அதாவது குளிப்பதையும்) பரிசுத்தப்படுத்துதல் உள்ளடக்கியதாய் இருந்திருக்கவேண்டும்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இத்தகைய வெளிப்பிரகாரமான சுத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தாலும், "பரிசுத்தம்" என்பதற்கு மூல மொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல் "வேறுபிரிக்கப்பட்டிருத்தல்" அல்லது "வித்தியாசமாயிருந்தல்" என்ற அர்த்தங்களைக் கொண்டுள்ளது. அதாவது, "அசுத்தமானதும், தேவனுக்கு அருவருப்பானதுமான காரியங்களிலிருந்து ஒருவன் தன்னைப் பிரித்தெடுத்து, அவருடைய அறிவுறுத்தல்களின்படி வாழ்வதற்கு அர்ப்பணிப்பதே பரிசுத்தமான வாழ்வாக இருந்தது." எனவே, தேவனின் பார்வையில் பரிசுத்தமாயிருப்பவன் மற்றவர்களிலிருந்து தன்னை வேறுபடுத்திக்கொண்டவனாகவும், மற்றவர்களைப்போல வாழாதவனாக தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு வாழ்பவனாகவும் இருப்பான். அதேசமயம், இது உள்ளான ஆவிக்குரிய சுத்திகரிப்பையும் உள்ளடக்கிய பரிசுத்தமாயுள்ளது. எனவே, "அவர்கள் தங்கள் உள்ளத்தை ஆராய்ந்து பார்த்து, தங்கள் வாழ்விலுள்ள பாவங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தேவனிடம் அறிக்கையிட்டு, அவருடன் சரியான உறவுக்குள் வரவேண்டியவர்களாகவும் இருந்தனர்."

கிறிஸ்தவ வாழ்வில் பரிசுத்தமாயிருப்பது மிக மிக முக்கியமானதாய் உள்ளது. "நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களாக" (லேவி.11:45) என்று தேவன் தெரிவித்துள்ளார். "நாம் பரிசுத்தமாய் இருப்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1தெச.4:3). நாம் பரிசுத்தமாயிருப்பதற்கே அழைக்கப்பட்டுள்ளோம் (1தெச.4:7). இதனால், "உங்களை அழைத்தவர் பரிசுத்தராய் இருக்கிறதுபோல நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தமாயிருங்கள்" (1பேது.1:15) என்று வேதாகமம் கூறுகிறது. எனவே, நாம் இவ்வுலக மக்களுடைய வழிமுறைகளின்படி வாழாமல், தேவனின் வார்த்தையான வேதாகமம் காண்பிக்கும் வழியில் வாழவேண்டும் (ரோமர் 12:2). அதாவது, வேதாகமம் செய்யச் சொல்கின்ற காரியங்களை நாம் செய்கிறவர்களாகவும், வேதாகமம் தடைசெய்துள்ள காரியங்களை நாம் தவிர்த்துக்கொள்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். இதுவே, நாம் பரிசுத்தமாய் வாழ்வதற்கான ஒரேயொரு வழிமுறையாக உள்ளது. இதனால்தான், "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்?" என்று கேட்கும் சங்கீதக்காரன், "உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்கிறதினால்தானே" (சங்.119:9) என்று பதிலளித்துள்ளான். எனவே, தேவனுடைய வார்த்தையின்படி நாம் வாழும்போது அவருடைய அற்புதமான வழிநடத்துதலை நம்முடைய வாழ்வில் நாம் காணலாம். "தேவன் நம்முடைய வாழ்வில் அற்புதம் செய்வதற்கு நமக்கு ஆவிக்குரிய ஆயத்தம் அவசியமாயுள்ளது." ஏனெனில், "மக்களின் இப்பரிசுத்தமே தேவன் அவர்களுக்காக அற்புதம் செய்வதற்கான அடிப்படையாய் உள்ளது." எனவே "மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவ பயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்" (2கொரி.7:1).

**3 மக்களின் பயணம்** (யோசுவா 3:6): இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியைக் கடந்து செல்வதற்கான மூன்றாவது ஆயத்த செயலாக, ஆசாரியர்கள் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்துகொண்டு ஜனங்களுக்கு முன்னே செல்வது இருந்தது. இதனால் உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துக்கொண்டு செல்லும்படி யோசுவா கட்டளையிட்டான்.

> பின்பு யோசுவா ஆசாரியர்களை நோக்கி: உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துக்கொண்டு, ஜனங்களுக்கு முன்னே நடந்துபோங்கள் என்றான். அப்படியே உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துக்கொண்டு ஜனங்களுக்கு முன்னே போனார்கள் (யோசுவா 3:6).

யோசுவா ஆசாரியர்களுக்கு கொடுத்த இந்தக் கட்டளை அவனுடைய விசுவாச வார்த்தைகளாக உள்ளன. ஏனெனில், யோசுவா ஆசாரியர்களைப் புறப்பட்டுப்போகச் சொன்ன பின்பே தேவன் யோசுவாவுடன் பேசத் தொடங்கி அவன் என்ன செய்யவேண்டும் என்று கூறுகின்றார் (யோசுவா 3:7-8). எனவே, தேவன் பேசும் வரைக்கும் எப்படி ஆற்றைக் கடப்போம் என்பதை அறியாதிருந்த போதிலும், எப்படியும் ஆற்றைக் கடக்க தேவன் உதவிசெய்வார் என்பதை நன்கு அறிந்திருந்த யோசுவா, ஆற்றைக் கடப்பதற்கான ஆயத்தங்களைச் செய்தவனாக, ஆசாரியர்களை எழுந்து புறப்படும்படி கூறுகின்றான்.

கடக்கமுடியாத நிலையில் யோர்தான் நதியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடினாலும், 40 வருஷங்களுக்கு முன்பு அற்புதமான விதத்தில் செங்கடலின் நடுவே வழியை உண்டாக்கிய தேவன், யோர்தான் நதியிலும் வழியை உண்டாக்குவார் என்னும் நம்பிக்கையில் யோசுவா இவ்வாறு கூறியுள்ளான். இதைப் போலவே கடந்தகாலத்தில் தேவன் நம்முடைய வாழ்வில் செய்தவற்றை நினைத்துப் பார்க்கும்போது, அவர் நிகழ்காலத்திலும் நம்முடைய வாழ்வில் அற்புதமாகச் செயல்படுவார் என்னும் நம்பிக்கை நமக்கு ஏற்படும். இதனால் நிகழ்கால நெருக்கடியின்போது தேவன் கடந்தகாலத்தில் நம்முடைய வாழ்வில் செய்த காரியங்களை நாம் ஒருபோதும் மறக்கலாகாது. அதுமாத்திரமல்ல, யோசுவாவைப்போல, தேவன் நிச்சயமாய் நமக்காகச் செயல்படுவார் என்னும் நம்பிக்கையில், நாம் செய்யவேண்டிய காரியங்களைச் செய்கிறவர்களாக இருக்கவேண்டும். கர்த்தர் தாமே நமக்கு உதவிசெய்து வழிநடத்தி ஆசீர்வதிப்பாராக.

தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ கணக்கு கொடுக்க வேண்டியவன்

உக்கிராணத்துவம் என்ற பதத்தை சாதாரணமாக பணத்துடன் சேர்த்துக் கவனிக்கிறோம். இந்தப் பொருளில் பல ஆழமான கருத்துகள் பல உண்டு. கிறிஸ்தவ உக்கிராணத்துவத்தில் பணத்தை மட்டும் வலியுறுத்திவிட்டு, மற்ற முக்கிய நோக்கங்களை நாம் மறந்துவிட்டோம். பவுலடியாருக்கு ஆழமான ஒரு உக்கிராணத்துவ உணர்வு இருந்தது. அதை அவர் 2கொரிந்தியர் 5ஆம் அதிகாரத்தில் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார்.




Dr.தியோடர் வில்லியம்ஸ்

## நற்செய்தியின் உக்கிராணத்துவம்

முதலாவது, நற்செய்தியின் உக்கிராணத்துவம் பற்றி பவுல் அதிக உணர்வுடன் கூறியுள்ளார். இது அவரது செய்திகள் மூலம் தெளிவாகிறது. "கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன்" (ரோமர் 1:14). "இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக் கொள்ளக்கடவன்" (1கொரி.4:1). "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ... உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதே" (1கொரி.9:16,17). "அவர் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். கிறிஸ்துவுக்குள் அவர்களை தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்" (2கொரி. 5:18,19). ஒப்புரவாக்குதலின் ஊழியமும் அத்துடன் ஒப்புரவாக்குதலின் உபதேசமும் நமக்கு ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

நாம் கூறும் நற்செய்தியானது செயலிலும் சொல்லிலும், உதட்டிலும் வாழ்விலும், பேச்சின் பிரகடனத்திலும், நடைமுறைச் செயலிலும் கடந்து செல்லவேண்டும். இதுவே நமது உக்கிராணத்துவம்.

நற்செய்தியின் உக்கிராணக்காரர்களான நாம், மற்றவர்களுக்கு அதை எடுத்துச் செல்லும் கடனாளிகளாக இருக்கிறோம். இது மேட்டிமையான எண்ணத்துடன் செய்யும் ஊழியமன்று. எல்லாம் உள்ளவர்கள், ஒன்றுமே இல்லாதவர்களிடத்தில் செல்வதுபோலவும், சிலாக்கியம் பெற்றவர்கள் எந்தச் சிலாக்கியமும் இல்லாதவர்களிடத்தில் செல்வதுபோலவும் நாம் செல்லவில்லை. அறிவிக்க கடமைப்பட்டவர்கள், நற்செய்தியைக் கேட்க வாய்ப்பில்லாதவர்களிடத்தில் செல்கிறோம். இதற்காகப் பெருமை பாராட்டவோ உயர்த்திக் கூறவோ இடமில்லை. இது தெரிந்துகொள்ளப்பட்ட சிலருக்கு மட்டுமா? இல்லை, ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும், முழு திருச்சபைக்கும் உரிய உக்கிராணத்துவம்!

அருட்பணியின் ஈடுபாடு ஒவ்வொரு விசுவாசிக்கும் உரியது. அப்படியே அருட்பணிக்கான கீழ்ப்படிதலும் தியாகமும் எல்லா விசுவாசிகளுக்கும் உரியது. அருட்பணியின் அழைப்பில் வேறுபாடு உண்டு. சிலர் ஊழியம் செய்ய அழைக்கப்படலாம். சிலர் ஊழியரை அனுப்ப அழைக்கப்படலாம். "அருட்பணியாளர்" "அவரை அனுப்புவோர்" என்ற இந்தப் பிரிவு மனிதரால் வகுக்கப்பட்ட பிரிவுதான். அனுப்புவோருக்கும் அனுப்பப்படுவோருக்குமான உக்கிராணத்துவம் ஒன்றே. அதைச் செயல்படுத்துவதே தேவனுடைய சித்தமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தரின் கடைசி கட்டளையை தமது பொறுப்பாக ஏற்றுக்கொள்ளுகிறவர்களை 'உலக கிறிஸ்தவர்கள்' என்று அழைக்கலாம் என்று பிரசித்திபெற்ற அருட்பணி வல்லுனரான டாக்டர் ரால்ப் வின்டர் கூறுகிறார். இன்னும் "கிறிஸ்துவின் நற்செய்தியை அறியாத மக்கள் கூட்டங்கள் உண்டு" என்பதை அவர்கள் அறிவார்கள். இந்த மக்களுக்கு நற்செய்தியை எடுத்துச் செல்வது ஒவ்வொரு விசுவாசியின் கடமையாகும். இந்த உக்கிராணத்துவத்தை செயல்படுத்துவதில் ஒவ்வொரு வரும் நமது நேரம், தாலந்துகள், பணம், சம்பத்து அனைத்தையும் கர்த்தருக்கு உரிமையாக்க வேண்டும். அவை யாவும் அவர் சித்தப்படி செலவிடவேண்டும்.

உக்கிராணத்துவம் என்பது, பிரசங்கிப்பதிலும் போதிப்பதிலும் மட்டுமல்ல, நமக்குரியதெல்லாம் அதில் அடங்கியிருக்கிறது. அதாவது, நமது முழு வாழ்க்கையும் உக்கிராணத்துவத்தில் அடங்கியுள்ளது. நமது மதிப்பீடுகள், இலக்குகள், ஈடுபாடுகள் ஆகியவைமூலம் நற்செய்தியை ஒருபோதும் கேளாதவர் கேட்கும்படி கொண்டு செல்லவேண்டும். இதுவே உக்கிராணத்துவத்தின் விளைவு. நாம் நற்செய்தியாகிய கண்ணாடியை அணிந்து, நம் வாழ்க்கையின் சூழ்நிலைகளைப் பார்க்க வேண்டும்.

## மக்களின் உக்கிராணத்துவம்

இரண்டாவதாக, மக்களின் உக்கிராணத்துவமாகும். "...இதுமுதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்" (2கொரி.5:16) என்று பவுல் கூறுகிறார். இதில் மக்களைப் பற்றி தம் மனப்பான்மை மாறினதைப் பவுல் குறிப்பிடுகிறார். இதற்குக் காரணம் என்ன? இதன் தொடர்பை முந்தின வசனத்தில் காணலாம். பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்.

நாமும் மக்களை உலகத்தார் காண்கிறது போல அவர் தம் கோத்திரம், ஜாதி, நிறம், பிரிவு, அந்தஸ்து இவற்றின் அடிப்படையில் காணக்கூடாது. இதற்குப் பதிலாக கல்வாரியின் வெளிச்சத்தில் காண வேண்டும். மக்களை நமது தன்னலத்துக்கென்று விளையாட்டு பொம்மை போலவும், தொல்லை தருபவர்களாகவும் காணக்கூடாது. அவர்களுக்காக கிறிஸ்து மரித்தார் என்பதை நினைவிற்கொண்டு, கல்வாரியின் கண்ணாடி கொண்டு காணவேண்டும்.

மத்தேயு 24:45-51 வசனங்களில் ஆண்டவர் கூறுகிறார், ஒரு பொல்லாத ஊழியக்காரன் புசித்தும் குடிகாரருடன் குடித்தும் தன் எஜமானின் ஆஸ்தியைத் தவறான வழியில் செலவழித்து போட்டான். அதுமட்டும் அன்றி தன் உடன் ஆட்களை அடித்தான். இதனால் அவர் மனிதர் மேலும் எஜமானின் ஆஸ்தியின் மேலும் உள்ள உக்கிராணத்துவத்தில் தவறிப்போனான். நமது தலைமுறையில் வாழும் பிற மனிதருக்கும், நம்முடன் வசிக்கும் மக்களுக்கும் நாம் கடனாளிகளாயிருக்கிறோம். இந்தப் பொறுப்பு நமது குடும்பத்திலும் அலுவலகத்திலும் நம் தேசத்திலும் உலகத்தின் கடைசி பரியந்தமும் உள்ள மக்கள்பால் நமக்கு இருக்கிறது. இவர்களில் ஒருபோதும் நற்செய்தியை அறியாதவர்கள் இருக்கலாம். பிறருக்காக நாம் கவலைப்பட வேண்டும். ஜெபிக்கவேண்டும். அவர்களுக்காக அக்கறைகொள்ள வேண்டும். நம்முடைய சொந்த செயல்பாடுகளிலும் திட்டங்களிலும் நிகழ்ச்சிகளிலும் சிக்கிக்கொண்டு மற்ற மக்களை மறந்துவிடுவது எளிது.

நம் நாட்டின் பலகோடி மக்களின் அடிப்படை தேவைகள் சந்திக்கப்படவில்லை. இதுபற்றி நாம் கவலைகொள்கிறோமா? இவர்களில் பலர் கிறிஸ்துவை ஒருமுறையாவது தம் வாழ்வில் கேள்விப்படாமல் மாண்டு போகிறார்கள். இதற்காக நாம் கவலைப்படுகிறோமா? அந்தமான் தீவுகளில் "கிறிஸ்துவைப்பற்றி இன்னும் அறிய நாங்கள் விரும்புகிறோம். எங்களுக்குப் புத்தகங்கள் வேண்டும்" என்று மக்கள் கூறுகிறார்கள். நாம் அவர்களுக்காக கவலைப்படுகிறோமா? ஒரிஸா பல்லஹாரா பகுதியில் உணவு இன்றி ஒரு முதிய தம்பதியர் மாண்டார்கள். இவர்களைப் போன்றோருக்காக நாம் கவலைப்படுகிறோமா?

## சொந்த வாழ்க்கையின் உக்கிராணத்துவம்

இறுதியாக, சொந்த வாழ்க்கையைப் பற்றிய உக்கிராணத்துவத்தைக் கவனிப்போம். "...சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" (2கொரி.5:10). நம்முடைய வாழ்க்கையின் இன்றைய நிகழ்ச்சிகளையும், நாளைய நிகழ்ச்சிகளையும் "நித்தியம்" என்ற கண்ணாடி கொண்டு நோக்குவோம். நம்முடைய தலைமுறை, சுயநலம் நிறைந்ததென்று சமுதாய நிபுணர்கள் சொல்லுகிறார்கள். நம்மையும் நமது இன்பத்தையுமே வாழ்வின் மையமாக நாம் கொண்டுள்ளோமா? சிந்திப்போம். மெய்யாகவே நமது சந்ததி சிற்றின்பங்களை நாடிச் செல்லும் சந்ததிதான்.

கிறிஸ்தவர்கள்கூட, தங்கள் சுய மகிழ்ச்சியைத் தங்கள் வாழ்க்கையின் இலக்காகக் கொண்டுள்ளனர். மகிழ்ச்சி ஒன்றே கிறிஸ்தவ வாழ்க்கையின் இலக்காக இருக்கமுடியாது. அது ஒரு துணைப்பயன்தான். அதைப் பின்தொடர்வாயானால் அதை தவறவிடுவாய். தேவனின் நோக்கத்திற்காக வாழுவாயானால் நீ அதைக் கண்டடைவாய். 'நான் எனக்காக வாழவேண்டும், எனக்காகவும் என் குடும்பத்திற்காகவும் கவலைப்பட வேண்டும்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரவர்கள் தங்களுக்காக கவலைப்படட்டும்' என பிறர் கூறுவதை எத்தனைமுறை கேள்விப்பட்டுள்ளோம்?

ஒருநாள் நீ உன் எஜமானுக்கு முன்னால் நின்று உன் வாழ்க்கையைப் பற்றி கணக்குக்கொடுக்க வேண்டும் என்பதை அறிவாயா? உன் நேரத்தையும் பிரயாசத்தையும் இப்பொழுது எந்தக் காரியங்களுக் காகக் கொடுக்கிறாய்? நித்தியத்தின் வெளிச்சத்தில் அலசிப் பார்க்கும்போது அந்தக் காரியங்கள் நிற்குமா?

ஒரு சிறுவன் தன் கிராமத்தில் புழுதி படிந்த ஒரு தெரு வழியே சென்றான். அவன் ஏதோ ஒரு வைரக் கல்லோ ஒரு புதையலோ தனக்கு ஒருநாள் கிடைக்கும் என்றும், அதனால் அவன் உடனடியாகப் பணக்காரன் ஆகலாம் என்றும் எப்பொழுதும் கனவு காண்பதுண்டு. அப்படி திடீர் என்று பணக்காரனானால் தான் வாழும் மண் குடிசை ஒரு மாளிகையாக மாறிவிடும் என்று அவன் நினைப்பதுண்டு. இப்படி நினைத்துக்கொண்டு சென்றபோது திடீரென்று ஏதோ ஒன்று புழுதியில் மின்னு வதைக் கண்டான். அதைக் கையில் எடுத்தான். அது கதிர் ஒளியுள்ள கல்லைப்போல் காணப்பட்டது. தான் கண்ட கனவு நனவாகும் வேளை வந்துவிட்டது என்று எண்ணினான். குடிசையில் அதை சோதித்தறிய சரியான விளக்கு இல்லை. அதை ஒரு தீப்பெட்டியில் வைத்து விடியற்காலையில் அதை காண காத்திருந்தான்.

இரவு முழுவதும் மாணிக்கக் கல்லைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தான். விடியற்காலையில் தீப் பெட்டியில் இருந்து அதை எடுத்துப் பார்த்தான். ஐயோ! என்னே ஏமாற்றம்! அது ஒரு சாதாரண வர்ணம்பூசப்பட்ட கண்ணாடி வளையல் துண்டுதான். இரவில் அது கதிர் வீசியது; மங்கிய ஒளியில் மாணிக்கக் கல்லாக தோன்றி யது. ஆனால் காலை வெளிச்சத்தில் அது விலைமதிப் பற்ற கண்ணாடித் துண்டு என்ற உண்மை புலப்பட்டது.

ஒருநாள் நம்மீதும் நித்திய வெளிச்சம் உதிக் கும். நாம் இப்பொழுது மங்கிய ஒளியில் சேகரித்தவை யாவும் அப்பொழுது எறிந்துவிடக் கூடியவையாக, விலைமதிப்பு அற்றவையாகப் போய்விடக்கூடும். இப்பொழுது மதிப்புள்ளது, அப்பொழுது முற்றிலும் மதிப்பில்லாமற்போகும். நித்தியத்தில் உண்மை மதிப்பு பெறக்கூடியவை எவை என்று இப்பொழுதே கண்டறிய வேண்டும். நம்முடைய வாழ்வில் காணும் வெற்றிகளும் சாதிக்கும் செயல்களும் தேவனுடைய மீட்புப் பணியின் நோக்கத்தில் எவ்விதத்திலாவது இணைக்கப்பட்டிருக்க வேண்டும். இல்லையெனில் அது விலைமதிப்பற்றதே.

ஒரே ஒரு வாழ்க்கை, அதுவும் சீக்கிரமாய்க் கழிந்துபோகும், கிறிஸ்துவுக்காக செய்வது மட்டும் நிலைத்திருக்கும். நீ கணக்குக் கொடுக்கவேண்டியவன் என்பதை எப்பொழுதும் மனதில் வைத்திருப்பாயாக.


CTS தவணை 2
ஏப்ரல் - ஜூலை



கொஹுவளை

| பாடநெறிகள் | விரிவுரையாளர்கள் |
| --- | --- |
| சபை சரித்திரம் 2: (கி.பி. 1517 - 1900) | பிரியா ஹென்டி |
| வியாக்கியானவியல் | பிரியா ஹென்டி |
| வெளிப்படுத்தல் | நெப்போலியன் பத்மநாதன் |
| கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபம் | ஜோண்சன் சந்ரசேகர் |
| வேதாகம விளக்கவுரை | குமார் சுப்ரமணியம் |
| திருத்தூதுப்பணியியல் தொடர்பான பிரச்சினைகள் | ஜூலியன் தேவதாசன் |
| ரோமருக்கு எழுதிய நிருபம் | நெப்போலியன் பத்மநாதன் |
| தாக்கமுள்ள தலைமைத்துவத்தின் 7 பண்புகள் | குமார் சுப்ரமணியம் |
| பத்துக்கட்டளைகளின் இன்றைய பிரயோகங்கள் | குமார் சுப்ரமணியம் |
| சிறுவர் ஊழியம் | சசிகலா சிறிஸ்கந்தராஜா |
| எபேசியருக்கு எழுதிய நிருபம் | ஜெய் சுதாகர் |
| சபை நிர்வாகமும் நிதியும் | கிறிஸ்துமணி செல்லையா |
| பரிசுத்த ஆவியானவரின் ஆட்தத்துவமும் செயற்பாடும் | பிரேம்குமார் ஆரோக்கியசாமி |

கொட்டாஞ்சேனை

| | |
| --- | --- |
| சிறு குழுவொன்றை வழிநடத்துவது எப்படி? (சிறுகுழுக்களின் வலிமை) | ஜோண்சன் சந்ரசேகர் |
| செல்வாக்குள்ள மிஷனரிகள் | குமார் ஆபிரகாம் |
| உங்களுக்குள் இருக்கும் தலைவரைக் கட்டியெழுப்புதல் | நெப்போலியன் பத்மநாதன் |
| புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம் | ஜெய் சுதாகர் |

முன்கூட்டிய பதிவுகளுக்கு
விசேட கட்டணச் சலுகை
18 - 23 மார்ச் 2013

இவ்வாறான பாடநெறிகளும் மேலும் பல பாடநெறிகளும் நாட்டின் பல பாகங்களிலுள்ள CTS கல்வி நிலையங்களில்:

கொஹுவளை (0115 524 257)
கொட்டாஞ்சேனை (0754 104 323)
யாழ்ப்பாணம் (0779 177 211)
வவுனியா (0779 773 150)
கிளிநொச்சி (0779 773 150)
ருஹுணு (0777 206 474)
ரஜரட்ட (0777 557 161)
அம்பாந்தோட்டை (0777 206 474)
கல்-எலிய (0777 206 474)

கொழும்பு இறையியல் கல்லூரி
தேசங்களை மறுரூபப்படுவதற்கான திருச்சபைக்கான வளங்கள்

பதிவுகளுக்கு தொடர்புகொள்க:
கல்வியியற் காரியாலயம்
189, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை
T: 011 5524257
E:registrar@cts.lk W:www.cts.lk

கொட்டாஞ்சேனை:
280-1B, ஜோர்ஜ் ஆர்.டி சில்வா மாவத்தை,
கொழும்பு 13.
T: 0754 104323; 0778 486191
E: suthagar@cts.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நானும் கர்த்தரை நேசிக்கின்றேன்...

காலம் முழுவதும் நானும் கர்த்தரை நேசிக்கின்றேன்...
அவரது ஆடையைத் தொட்டு சுகம்பெற ஆசைப்படுகின்றேன்...
அவரது தழும்புகளைத் தொட்டு குணமடைய விரும்புகின்றேன்...
அவரது கைகளைத் தொட்டு விசுவாசிக்க முற்படுகின்றேன்...
அவரது பாதங்களை கழுவி அன்பைக் காட்ட வாஞ்சிக்கிறேன்...
அவரது இரத்ததால் கழுவி சுத்தமாக வேண்டுகின்றேன்...
அவரது உமிழ்நீரால் கழுவி கண்கள் திறக்கப்பட
பிரார்த்திக்கின்றேன்...
மொத்தத்தில்,
இனி நான் காலமுழுவதும் கர்த்தரை
நேசிக்கப் போகின்றேன்... நீங்கள்?

## நான் என்ன செய்துகொண்டிருக்கின்றேன்?

பேதுருவைப் போல
பிரசங்கிக்க விரும்புவோருண்டு.
ஆனால் சேவல்கூவும்போது
மறுதலித்து விடுவார்!
ஆகா!
இதைப் பார்த்துக்கொண்டு
நான் என்ன செய்கின்றேன்?

சவுலைப் போல
தீர்க்கதரிசனம் உரைக்க விரும்புவோருண்டு.
ஆனால் பணஆசை வரும்போது
தேவ கட்டளையை மீறிவிடுவார்!
அந்தோ!
இவர்கள் மத்தியில் நான்
எங்கே நிற்கின்றேன்...?

உலகை அசைந்த மாமன்னர்கள்... பலர்,
வசனம் உரைத்த தீர்க்கதரிசிகள்... பலர்...
வார்த்தைகளால் மனம்மாறச் செய்தவர் பலர்...!
முழு உலகையும் ஆதாயம் பண்ணியவர் பலர்...!
ஐயகோ!
பிரபல தேவ ஊழியர்கள் மத்தியில்
நான் என்ன செய்யப்போகின்றேன்?

மனந்திரும்புதலைக் குறித்து
பிரசங்கித்தும்...
மனம் திரும்பாமலே மரிக்கும்...
கிறிஸ்தவ போதர்கள் பலர்...
ஐயையோ!!!
இவர்கள் மத்தியில் நானும்
என்னத்தான் செய்துகொண்டிருக்கின்றேன்...?

இ.வஷ்னீ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் சோலை


**7 வித்தியாசங்கள்**

1. ..............................
2. ..............................
3. ..............................
4. ..............................
5. ..............................
6. ..............................
7. ..............................



அன்பு சிறார்களே,
இவ்விரு படங்களில் காணப்படும் வித்தியாசங்களில் குறைந்தது வித்தியாசங்களைக் கண்டுபிடித்து தபாலட்டையில் மாத்திரம் எழுதி 2013 மே 15ம் திகதிக்குமுன் அனுப்பிவையுங்கள்.

கண்டுபிடிப்பு
சத்தியவசன சஞ்சிகை
P.O.Box 1012,
Colombo.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த வைத்தியர்

**'நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்'. (ரோமர் 10:15)**

பாலுவின் வீட்டார் அப்போது இரவு உணவை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.
அப்போது 'நான் வளர்ந்த பிறகு, என்னவாக இருப்பேன் தெரியுமா?
ஒரு டாக்டராக' என்றான் பாலு.

'அப்படியா, அது மிகவும் நல்லது' என்று கூறிய அப்பா 'ஏன் மகனே அந்த முடிவுக்கு வந்தாய்' என்று கேட்டார்.

'டாக்டர்மார் நிறைய பணம் சம்பாதிக்கிறார்கள்' என்றான் பாலு.

'அதுதானா நீ டாக்டராக விரும்புவதற்குக் காரணம்' என்று கேட்ட அம்மா, 'நான் நினைத்தேன் நீ டாக்டராக விரும்புவதற்குக் காரணம், மற்றவர்களுக்கு உதவி செய்ய விரும்புவதால் என்று'. அதற்கு பாலு. 'அதுவும் ஒரு காரணம்தான்: நான் டாக்டராக இருந்தால் அநேக மக்களுக்கு உதவ முடியும்' என்றான்.

அப்போது அப்பா ஒரு கேள்வி கேட்டார்: "பாலு, உனக்குத் தெரியுமா, வேதத்தை எழுதியவர்களில் கூட ஒரு மனிதர் டாக்டராக இருந்தார்" என்று.

'இல்லையே, யாரப்பா அது?'

'டாக்டர் லூக்கா என்பவர்தான் அவர். பவுல் என்ற பக்தன், அவரை பிரியமுள்ள வைத்தியரே என்று அழைக்கிறார். புதிய ஏற்பாட்டின் மூன்றாவது புத்தகத்தை இந்த லூக்காதான் எழுதினார். அப்போஸ்தல நடபடிகள் என்ற புத்தகத்தையும் இவர்தான் எழுதினார்' என்றார் அப்பா.

'சரி, அப்படியானால், மக்களுக்கு உதவ வேண்டுமென்றா லூக்கா ஒரு வைத்தியனாக மாறினார்' என்றான் பாலு.

'தெரியவில்லை மகனே, ஆனால், இயேசுவை அறிந்த பிறகு அவர் மக்களுக்கு உதவ விரும்பினார். மக்களுடைய சரீரத்துக்கு மாத்திரமல்ல, ஆத்துமாவுக்கும் உதவ விரும்பினார்.' என்றார் அப்பா.

'நானும் அப்படிப்பட்ட ஒரு டாக்டராக மாற முடியுமா அப்பா' என்றான் பாலு.

'அப்படியான காரியத்தை இன்று தாதிமாரும், டாக்டர் மாரும் செய்கிறார்கள். அவர்களை வைத்திய மிஷனரிமார், அல்லது ஊழியர்கள் என்று அழைக்கிறோம். அவர்கள் மருத்துவ வசதியில்லாத மக்களுக்கு உதவி செய்வதோடு இயேசுவைப் பற்றியும் அவர்களுக்கு கூறி வருகிறார்கள்' என்று கூறிய அப்பா, 'ஆனால், அவர்களுக்கு சாதாரண டாக்டர்மார்களுக்கு கிடைப்பதைப் போல் பெருந்தொகைப் பணம் கிடைப்பதில்லை' என்றார்.

உடனே பாலு என்ன சொன்னான் தெரியுமா?
'பரவாயில்லை அப்பா, நானும் ஒரு வைத்திய ஊழியனாக மாற விரும்புகிறேன். அப்போது, நான் மக்களின் சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் என்னால் உதவ முடியும். முத்துகளைப் பார்க்கிலும், இயேசு சுவாமியைப்பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறுவது, அவர்களுக்கு உதவியாய் இருக்கும்' என்றான்.

அருமை தம்பி தங்கையரே, ஆம், மனிதனுக்கு அவனுடைய சரீரத்தைப் பார்க்கிலும், அவனுடைய ஆத்துமாவே முக்கியமானது. ஏனென்றால், இந்த சரீரமானது அழிந்துவிடும். ஆத்துமாவோ அழிவதில்லை. எனவே, அழியாதவற்றைக் குறித்துதான் நாம் சிந்திக்கவேண்டும். ஆத்துமாவை இயேசு ஒருவரே குணமாக்க முடியும். நீங்கள் இயேசுவுக்கு பிரியமான பிள்ளைகளாய் இருக்கின்றீர்களா? எல்லா மனிதர்களும் அவரை அறிய வேண்டும், அவருக்கு பிரியமான வாழ்க்கை வாழ வேண்டும். பிறருக்கு உதவி செய்வதில் சோர்ந்து போகாமல் வாழ இன்றே ஜெபம்பண்ணுவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏதேன்!!

## மணமகள் விபரம்

**ஏதேன் விபரங்களைப் பெற:**

- இங்கு வெளிவரும் விளம்பரங்களில், "பொருத்தமானது என நீங்கள் நினைக்கும் விளம்பரத்திற்கான தகவல்கள் தேவைப்படின், "உங்கள் பெயர் முகவரி, தொலைபேசி போன்ற விபரங்களை விளம்பர இலக்கத்துடன்" தெளிவாக குறிப்பிட்டு அதற்கான முத்திரை உடன் எமக்கு அனுப்பிவைக்க வேண்டும்.
- உங்கள் விபரங்களை, விளம்பரம் கொடுத்தவருக்கு அனுப்பி வைப்போம். அவர்கள் விரும்பினால் மட்டுமே தொடர்புகொள்வர்.
- இப் பகுதியில் வெளியாகும் நபர்களைப் பற்றியோ அல்லது கொடுக்கப்படும் விபரங்களின் உண்மைத்தன்மைக் குறித்தோ சத்தியவசனம் உறுதிப்படுத்தவோ பொறுப்பேற்கவோ மாட்டாது.
- ஒவ்வொரு விண்ணப்பமும் தனித்தனியாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**ஏதேன் சஞ்சிகையில் பிரசுரிக்க:**

- உங்கள் விபரங்கள் இப்பகுதியில் சேர்க்கப்பட வேண்டுமானால், அதற்கான விண்ணப்பப் படிவங்களை எமக்கு எழுதி பெற்றுக்கொள்ளவும்.
- உரிய விண்ணப்பப்படிவத்தினை நிரப்பி, 2013 மே 15ம் திகதிக்கு முன்பாக எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவும், தாமதமாயின் அடுத்த சஞ்சிகையில் சேர்த்துக்கொள்ளப்படும்.
- உங்கள் விபரங்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் தரப்படா விடில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். சொத்து, சீதனம், குலம் பற்றிய விபரங்கள் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.
- இது சேவை நோக்கத்துடன், உங்கள் நன்மைக்காகவே செய்யப்படும் இச்சேவைக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்பட மாட்டாது.
- இதன் மூலம் பிரச்சனைகள் ஏதும் எழுமாயின், அதனை சம்பந்தப்பட்டவர்களே தீர்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு சத்தியவசன ஊழியர்களோ சத்தியவசன ஊழியமோ எந்தவிதத்திலும் பொறுப்பேற்க மாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு:

**"ஏதேன்" த.பெ.1012, கொழும்பு, இலங்கை.**

(2013/E.F/2452) வயது 36, உயரம் 5'5". க.பொ.த(சா/த) கற்று ஆசிரியையாக தொழில்புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கனடா).

▸ ▸ ▸

(2013/E.F/2453) வயது 23, உயரம் 5'4". கிருபையின் தேவாலயம், பட்டதாரி. தாதியாக கடமையாற்றும் மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (கனடா).

▸ ▸ ▸

(2013/E.F/2454) வயது 37, உயரம் 5'2". அங்கிலிக்கன் சபை, க.பொ.த(உ/த) கற்று, வீட்டிலிருந்தவாறே தையல், கேக் செய்கின்ற மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 13).

▸ ▸ ▸

(2013/E.F/2455) வயது 41, உயரம் 5'5". Sanctuary சபை, க.பொ.த(சா/த) கற்று, தாதியாக பணிபுரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 6).

▸ ▸ ▸

(2013/E.F/2456) வயது 34, உயரம் 5'2". Sanctuary சபை, க.பொ.த(சா/த) கற்று, Art Galary Designer ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 9).

▸ ▸ ▸

(2013/E.F/2457) வயது 29, உயரம் 5'2". இயேசு இரட்சிக்கிறார் சபை, க.பொ.த(உ/த) கற்று, அரசாங்க ஆசிரியையாக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (வரக்காபொல).

▸ ▸ ▸

(2013/E.F/2458) வயது 29, உயரம் 5'3". அங்கிலிக்கன் திருச்சபை. க.பொ.த(சா/த) கற்று, மருந்தாளராக பணிபுரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (ரத்மலானை).

▸ ▸ ▸

(2013/E.F/2459) வயது 30, உயரம் 5'3". Sanctuary சபை, Computer Engineer ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (ரத்மலானை).

▸ ▸ ▸

(2013/E.F/2460) வயது 26, உயரம் 5'2". Diploma in Accounts கற்று Pharmacy யில் பணிபுரியும் மணமகளுக்கு, வெளிநாட்டு அல்லது உள்நாட்டு மணமகனை தேடுகின்றனர். (பலாங்கொடை).

▸ ▸ ▸

(2013/E.F/2461) வயது 32, உயரம் 4'11" நாற்சதுர சுவிசேஷ சபை, 8ம் வகுப்பு வரை சிங்கள மொழிமூலம் கற்ற மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (நுகேகொடை).

▸ ▸ ▸

(2013/E.F/2462) வயது 25, உயரம் 4'9". அங்கிலிக்கன் திருச்சபை. க.பொ.த(உ/த) கற்று, Account Assistant ஆக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (ஏ-கல).

▸ ▸ ▸



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2013/E.F/2463) வயது 28, உயரம் 5'. R.C சபை. க.பொ.த(உ/த) கற்று, மும்மொழி பேசக்கூடிய கணினி கற்று வியாபாரம் செய்கின்ற மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (பலாங்கொடை).

▸ ▸ ▸

(2013/E.F/2464) வயது 45, உயரம் 5'. க.பொ.த(சா/த) கற்று, அழகு நிலைய நிபுணராக தொழில்புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 8).

▸ ▸ ▸

(2013/E.F/2465) வயது 32, அரச துறையில் தாதியாக பணிபுரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (தியத்தலாவ).

▸ ▸ ▸

(2013/E.F/2466) வயது 30, உயரம் 5'5". பெந்தகோஸ்தே சபை, க.பொ.த(உ/த) கற்று, ஆசிரியையாக கடமையாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (மொரட்டுவை).

▸ ▸ ▸

(2013/E.F/2467) வயது 24, உயரம் 5'. தேவனுக்கே மகிமையுண்டாவதாக சபை, 7ம் ஆண்டுவரை கற்று தையல் தொழில்புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 10).

▸ ▸ ▸

(2013/E.F/2468) வயது 27, உயரம் 5'1". தேவனுக்கே மகிமையுண்டாவதாக சபை, 10ம் ஆண்டுவரை கற்ற மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 10).

▸ ▸ ▸

(2013/E.F/2469) வயது 24, உயரம் 5' ஜீவ இல்லம் சபை. க.பொ.த(உ/த) கற்று யாழ் பல்கலைக்கழக பட்டதாரியாகி காப்புறுதி தரகராக பணியாற்றும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (தெகிவளை).

▸ ▸ ▸

(2013/E.F/2470) வயது 32, உயரம் 5'4". இயேசு ஜீவிக்கிறார் சபை. க.பொ.த(சா/த) கற்ற மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

▸ ▸ ▸

(201[illegible]/2471) வயது 23, உயரம் 5'3". A.O.G சபை. க.பொ.த(உ/த) கற்று, Ticketting Assistant ஆக பணியாற்றும் மணமகளுக்கு, மணமகனை தேடுகின்றனர்(கொழும்பு 12).

▸ ▸ ▸

(2013/E.F/2472) வயது 38, உயரம் 5'4". R.C சபை. க.பொ.த(சா/த) கற்ற வாய்பேச முடியாத மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 13).

▸ ▸ ▸

(2013/E.F/2473) வயது 36, உயரம் 5'7". மேல்வீட்டறை சபை, மணமகளுக்கு, மணமகனை தேடுகின்றனர். (ஜா-எல).

▸ ▸ ▸

(2013/E.F/2474) வயது 29, உயரம் 5'2". அங்கிலிக்கன் சபை. க.பொ.த(உ/த) கற்று, காப்புறுதி நிறுவனத்தில் பணிபுரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

▸ ▸ ▸

(2013/E.F/2475) வயது 37, உயரம் 5'1". A.O.G சபை மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (களுபோவில).

▸ ▸ ▸

# மணமகன் விபரம்

(2013/E.M/3236) வயது 34, உயரம் 5'5". R.C சபை, Account Assistant ஆக மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (தியத்தலாவ).

▸ ▸ ▸

(2013/E.M/3237) வயது 46, உயரம் 5'11". சுவிஸ்சலாந்தில் பணியாற்றுகின்ற இந்திய மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (கொழும்பு 8).

▸ ▸ ▸

(2013/E.M/3238) வயது 26, உயரம் 5'4". வார்த்தையின் வல்லமை சபை, க.பொ.த(சா/த) கற்று, அரசாங்க உத்தியோகம் செய்கின்ற பகுதிநேர ஊழியராகவுள்ள மணமகனுக்கு மணமகளைத் தேடுகின்றனர். (ராகமை).

▸ ▸ ▸

(2013/E.M/3239) வயது 23, உயரம் 5'6". வார்த்தையின் வல்லமை சபை, க.பொ.த(சா/த) கற்று, தனியார் நிறுவனத்தில் பணியாற்றுகின்ற மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (ராகமை).

▸ ▸ ▸

(2013/E.M/3240) வயது 34, உயரம் 5'6". A.O.G சபை. க.பொ.த(உ/த) கற்று, ஊடகத்துறையில் பணியாற்றும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (களுபோவில).

▸ ▸ ▸

(2013/E.M/3241) வயது 35, உயரம் 5'10". C.S.I சபை, B.A பட்டம் பெற்று பல்கலைக்கழக விரிவுரையாளராக கடமையாற்றும் மணமகனுக்கு, 30 வயதுக்குட்பட்ட படித்த ஆசிரியை அல்லது அரச தொழில் புரியும் மணமகளைத் தேடுகின்றனர்.(யாழ்ப்பாணம்)

▸ ▸ ▸

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered in the Department of Post of Sri Lanka under No. QD/106/News/2013

COLOMBO 30.4.13

ශ්‍රී ලංකා SRI LANKA 032.00 PB1519 Rs CTS

To:

Ms J Vathshala T \ 13422 \ 1 \ JAN2014
Methodist Church
Kaluwanchikudy 30200

BACK TO THE BIBLE
ජීවනාලෝකය சத்தியவசனம்

From :
Sathiyavasanam
P.O. Box 1012
Colombo.

# சிலுவையின் மார்க்கம்!

இயேசு கிறிஸ்துவின் சிலுவையே பரலோகத்தின் வாசலைத் திறந்துள்ளது
(ஜார்ஜ் போர்ட்மேன்)

இயேசு கிறிஸ்துவின் சிலுவையோடு தொடர்பற்ற உபதேசங்கள் அனைத்தும் மனிதனைத் தவறான வழியிலேயே வழிநடத்துகின்றன
(ஆஸ்வால்ட் சேம்பர்ஸ்)

பரலோகம் வரை எட்டக்கூடிய ஒரேயொரு ஏணி இயேசு கிறிஸ்துவின் சிலுவையே
(ஜார்ஜ் போர்ட்மேன்)

சிலுவையில் இயேசு செய்த தியாகமே நமக்கு உண்மையான விடுதலையைக் கொடுக்க முடியும்
(சின்டி ஹெஸ் காஸ்பர்)

கிறிஸ்துவின் சிலுவையானது தேவனின் அன்பின் உன்னதத்தையும் உலகத்தின் பாவத்தின் இழிவான நிலைமையையும் காட்டுகிறது

மானிடப் பாவத்துக்கான தேவனுடைய கிரயமே கிறிஸ்துவின் சிலுவை!

தேவனுடன் தொடர்புகொள்ள வைக்கும் ஒரேயொரு மார்க்கம் இயேசு கிறிஸ்துவின் சிலுவையே!

கிறிஸ்தவம் சிலுவையின் மார்க்கம்!
(லியோன் மொரிஸ்)

கிறிஸ்தவ சுவிசேஷம் இயேசு கிறிஸ்துவின் சிலுவை பலியையே மையமாகக் கொண்டுள்ளது.

கல்வாரி சிலுவையையும் முழங்காலில் நிற்கும் ஒரு பக்தனையும் கண்டு சாத்தான் அஞ்சி நடுங்கி ஓடுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org